₹100/-

2 - 8

ஞானகுரு

# மகிழ்ச்சி

ஆகஸ்ட் 2023

எஸ்.கே.முருகன்



## மத்தவங்க என்ன நினைப்பாங்க..?

திருமண உறவு
சிக்கல்கள் தீர்வு மையம்



திருமணத்திற்கு முன்...
திருமணத்திற்கு பின்...
சிறப்பு ஆலோசனைகள்

தொடர்புக்கு
GG Relationship Counseling
Chennai, Madurai +91 80725 89355

www.gyanaguru.com



ஆசிரியர் பக்கம்

# கேட்டால் கொடுங்கள்... தட்டினால் திறங்கள்..!

உடன் பிறந்தவர்கள், நண்பர்கள், உறவினர்கள், உடன் பணியாற்றுபவர்கள், பிள்ளைகள், பேரன், பேத்திகள் போன்ற நெருக்கமான வட்டத்தில் ஒருவர் பணத்துக்காக மிகவும் சிரமப்படுகிறார் என்பது உங்களுக்குத் தெரியவருகிறது. என்ன செய்யப் போகிறீர்கள்..?

அ) நிறையவே பணம் இருப்பதால் உதவி செய்வதால் எந்த இழப்புமில்லை.

ஆ) மிகக்குறைந்த சேமிப்பே இருக்கிறது. அவர் திருப்பித்தரவில்லை என்றால் பெரும் சிரமத்துக்கு ஆளாக நேரிடும்.

இ) பணமே இல்லை. கடன் வாங்கிக்கொடுத்தே உதவ முடியும்.

இந்த மூன்றில் எந்த ஒரு சூழலில் இருந்தாலும், நீங்களே வலியச்சென்று பண உதவி செய்யவேண்டிய அவசியம் இல்லை. ஒருவர் கேட்பதற்கு முன் உதவி செய்வதே மிகப்பெரிய தர்மம், குறிப்பறிந்து உதவுவதே மனிதநேயம் என்றெல்லாம் போதிக்கப்படுவதை தலையில் ஏற்றிக்கொள்ள வேண்டாம். ஏனென்றால் கேட்காமல் கொடுக்கப்படும் பணத்துக்கு ஒருபோதும் மதிப்பு கிடையாது.

கேட்காமல் கொடுக்கப்படும் பணம் பல்வேறு சந்தேகங்களை கிளப்பிவிடும். பணம் கொடுத்து அவமானப்படுத்துவதாக கஷ்டப்படுபவர்களே கோபப்படலாம். அவர்களுடைய தன்மானத்தை உரசிப்பார்ப்பதாக நினைக்கலாம். எனவே, கஷ்டப்படும் நபர்களின் வாழ்க்கையில் தலையிடுவதற்கு முன்பு பொறுமையுடன் காத்திருங்கள். அவர்கள் தேடி வந்தால் நல்லது. தேடி வரவில்லை என்றால் மிகவும் நல்லது.

நான் உதவி செய்ய தயாராக இருப்பது கஷ்டப்படுபவருக்குத் தெரியாதே என்று சந்தேகப்படாதீர்கள். மழை நீர் இண்டு இடுக்குகளில் எல்லாம் நுழைந்து வெளியேறுவதை போன்று, யாரிடமெல்லாம் உதவி கிடைக்கும் என்பதை கஷ்டப்படுபவர்கள் நிச்சயம் தேடி கண்டுபிடித்துவிடுவார்கள். அவர்கள் வேறு ஏதேனும் வழியில் பணம் தேடிக்கொண்டு இருக்கலாம். அவர்களால் சமாளிக்கமுடியாத நேரத்தில் கண்டிப்பாக தேடிவந்து கடன் கேட்பார்கள். அந்த நேரத்தில் பணம் கொடுப்பதே அவர்களுக்கு பேருதவியாகத் தெரியும்.

பணம் மட்டுமல்ல, அறிவுரையும் அப்படியே. கேட்காத நேரத்தில் யாருக்கும் அறிவுரை கொடுக்காதீர்கள். பிறர் வாழ்க்கையில் எப்போதும் பார்வையாளராக மட்டுமே இருங்கள். அதுவே அவர்களுக்கும் உங்களுக்கும் மகிழ்ச்சி.

– ஆசிரியர்

www.gyanaguru.com



இந்தப் பிரபஞ்சம் தோன்றியது பிக் பேங் எனப்படும் பெருவெடிப்பு மூலம் என்று அறிவியலாளர்கள் உறுதிபடத் தெரிவிக்கிறார்கள். அந்த பெருவெடிப்பு நொடி தாண்டி நிகழ்ந்த அனைத்து நிகழ்வுகளையும் அறிவியல் தெளிவாக வரையறுத்து இருக்கிறது. ஆனால் அது துவங்கிய exact நொடியில் என்ன நடந்தது, அல்லது துவங்குவதற்கு முந்தைய கணங்களில் என்ன நடந்தது; அந்தப் பெருவெடிப்பை எது துவக்கியது என்பது குறித்து இன்று வரை நமக்குப் புரிதல் இல்லை. அதாவது அறிவியலுக்கு இல்லை. அதற்கான தேடலில் அறிவியலாளர்கள் இன்றுவரை முட்டி மோதிக் கொண்டிருக்கின்றனர்.

# பிரபஞ்சத்தை உருவாக்கியவர்

# விஷ்ணுவா... இயேசுவா... அல்லாவா...

> இவர்கள் எழுதிய மத நூல்கள் எதுவுமே பிரபஞ்சம் 14 பில்லியன் ஆண்டு களுக்கு முன் தோன்றியது என்பதை சொல்லவில்லை. பூமி 3.7 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியது என்று எந்த இறைத் தூதரும் சொல் லவில்லை. ஒரே ஒரு இயற்பியல் விதியைக் கூட ஒரு புனித நூலும் சுட்டிக் காட்டவில்லை.



அப்படியானால் அதைக் கடவுள்தான் துவக்கினார் என்று நம்பிக் கொள்வதில் என்ன பிரச்சினை..?

இந்த கேள்விக்கு இயற்பியல் விஞ்ஞானி பிரையான் கிரீன் சொன்ன பதில் என்ன தெரியுமா?

சரி, அப்படி சொல்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்படி சொல்வது பிக் பேங் குறித்த நமது புரிதலை ஏதாவது வகையில் மேம்படுத்துகிறதா?' இந்த இரண்டு பதில்களை சொல்லிப் பாருங்கள்:

- 'பிக் பேங் எப்படி துவங்கியது என்று நமக்குத் தெரியாது.'
- பிக் பேங்கை துவக்கியது கடவுள்

முதல் வாக்கியத்தை விட இரண்டாவது வாக்கியம் எந்த அளவிலும் நமது புரிதலை ஆழப்படுத்தவில்லையே? முதல் பதில் போலவே இரண்டாவது பதிலும் அர்த்தமற்ற வாக்கியம்தான். சரி, கடவுள் துவக்கினார் என்றால் எந்தக் கடவுள்? விஷ்ணுவா, யாஹ்வேவா, இயேசுவா, அல்லாஹ்வா? அல்லது வழக்கொழிந்து போன கிரேக்க, மாயன் கடவுளர் எவராவதா? அந்தக் கடவுளும் கூட எதற்காக இந்தப் பிரபஞ்சத்தை உருவாக்கினார்? எப்படி உருவாக்கினார்? பிக் பேங்குக்கு முன் பெரிதாக ஒன்றுமே இருக்கவில்லை எனில் ஒன்றுமே இல்லாததில் இருந்து எப்படி எதையோ உருவாக்கினார்?

இந்த எந்தக் கேள்விகளுக்கும் அந்த இரண்டாவது பதில் விளக்கம் கொடுக்கப் போவதில்லை. முதல் பதிலிடமும் விளக்கம் இல்லை. அதாவது முதல் பதிலுக்கும் இரண்டாவது பதிலுக்கும் பொருளில் எந்த வித்தியாசமும் இல்லை.

இதற்கெல்லாம் ஒவ்வொருவரும் தத்தமது மதங்கள் முன்வைத்த கற்பனைகள் சார்ந்து சில பதில்களை கொடுக்கக் கூடும். ஆனால் அவை எல்லாமே எந்த ஆதாரமும் அற்ற கற்பனைதான். மகாவிஷ்ணுதான் பிரபஞ்சத்தைப் படைத்தார் என்று ஒரு இந்து சொல்வார். அல்லாஹ்தான் படைத்தார் என்று ஒரு முஸ்லிம் சொல்வார். பாகிஸ்தானில் ஒரு இயற்பியல் புத்தகத்தின் முதல் அத்தியாயம் '14 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு இந்தப் பிரபஞ்சத்தை அல்லாஹ் படைத்தார்,' என்று துவங்குகிறது.


ஆனால் அதை சொல்வது இன்றுதான். இவர்கள் எழுதிய மத நூல்கள் எதுவுமே பிரபஞ்சம் 14 பில்லியன் ஆண்டுகளுக்கு முன் தோன்றியது என்பதை சொல்லவில்லை. பூமி 3.7 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியது என்று எந்த இறைத் தூதரும் சொல்லவில்லை. ஒரே ஒரு இயற்பியல் விதியைக் கூட ஒரு புனித நூலும் சுட்டிக் காட்டவில்லை. அவ்வளவு கூட வேண்டாம்: பூமியில் மொத்தம் ஏழு கண்டங்கள் உள்ளன என்ற எளிய தகவலைக் கூட ஒரு புனித நூலும் தெரிவிக்கவில்லை. காரணம் அந்த நூல்களை எழுதியவர்களுக்கு தாம் பிறந்து வளர்ந்த பழங்குடி கலாச்சாரங்கள் தாண்டி வேறு எதைப் பற்றியும் எந்த அறிவும் இல்லை. அந்தப் பழங்குடி கலாச்சார அறிவுகள் மட்டுமே அவரவர் புனித நூல்களில் இடம் பெற்றுள்ளன என்பதில் எந்த ஆச்சரியமும் இல்லை.

அதாவது, அறிவியல் முன்னேற்றத்துக்கு என ஒரே ஒரு குந்துமணி அளவுக்குக் கூட எந்த உலக மதமும் பங்களிக்கவில்லை. சொல்லப் போனால், அறிவியல் முன்னேற்றத்தை பல மதங்கள் கோபமுடன் தடுத்தே கூட இயங்கி வந்திருக்கின்றன. ஆனால் நவீன உலகில் ஏதாவது அறிவியல் முன்னேற்றம் நிகழ்ந்தால் அதைத் தனதாக சொந்தம் கொண்டாடுவதற்கு மட்டும் மதங்கள் தயங்குவதில்லை. பெரு வெடிப்பில் பிரபஞ்சம் துவங்கியதா? ஓகே, அதைத் துவக்கியதே எங்கள் கடவுள்தான். பரிணாம வளர்ச்சியில்தான் உயிர்கள் தோன்றிப் பல்கிப் பெருகினவா? அடடா, அதற்கு வித்திட்டதே எங்கள் இறைவன்தான். இப்படி சொல்லிக்கொள்வதால் ஏதேனும் மாறிவிடப் போகிறதா.. இல்லையே.." என்று கூறினார்.

ஆம்., தெரியாது என்பதை தெரியாது என்றே சொல்வோம்.







## கவித்துவம்

உதிர்ந்த பூக்களை
மிதித்தபடி
மரத்திலிருக்கும் பூக்களை
ரசித்துக் கொண்டிருக்காதே.
அதனதன் இயல்பிலிருக்கின்றன
பூக்கள்.

- நரன்

# பணத்துக்கு செடி திருஷ்டிக்குப் பழம்



“வீட்டுக்கு வீடு மணி பிளாண்ட் வளர்க்கிறார்கள்… பணம் கொட்டும் என்ற நம்பிக்கையில் செடி வளர்க்கிறார்கள். எப்படியோ ஒரு செடி வளர்ப்பது நல்லதுதானே என்று இதனை வரவேற்கலாம்தானே…” என்று ஞானகுருவிடம் சந்தேகம் கேட்டார் மகேந்திரன்.

வெற்றிலை போட்டு சிவந்த வாயைக் காட்டி சிரித்த ஞானகுரு. ”ஆஹா… உன்னுடைய நெருங்கிய உறவு அல்லது பிரியமான நண்பர் வீட்டின் மணி பிளாண்ட் செடியில் இருந்து ஒரே ஒரு துண்டு கேட்டுப் பார். அவர்கள் கொடுத்துவிட்டால், நிச்சயம் பாராட்டலாம்..” என்றார்.

‘’அதெப்படி தருவாங்க…? யாருக்காவது மணி பிளாண்ட் செடியை உடைத்துக் கொடுத்தால், அந்த வீட்டில் இருக்கும் அத்தனை செல்வமும் வாங்கியவரிடம் போய் சேர்ந்துவிடும் என்ற நம்பிக்கை இருக்கிறதே… அதனால் யாருக்கும் தெரியாமல் பிடுங்கித்தானே எல்லோரும் நட்டு வளர்க்கிறார்கள்…’’ என்றார் மகேந்திரன்.

”மனிதர்களின் ரத்தத்தில் பேராசை ஊறியிருக்கிறது. அதுதான், பல்வேறு ரூபங்களில் வெளிப்படுகிறது. ஒரு செடியால் பூ அல்லது காய் கொடுக்க முடியும். அது எப்படி பணம் கொடுக்கும்..? நீளநீளமாக மணி பிளாண்ட் வளர்ந்திருக்கும் வீடுகளில் எல்லாம் செல்வம் கொட்டுகிறதா..? இன்னும் வேறு என்ன செய்கிறார்கள்..?”

‘’கற்றாழை செடியை தலைகீழாக கட்டி தொங்க விடுகிறார்கள். அந்த கற்றாழை செடி வாடிவிட்டால் குடும்பத்தில் கஷ்டம் வருமாம்.. அதுவே தளதளப்பாக இருந்தால் குடும்பம் செல்வச்செழிப்பாகவும் ஆரோக்கியமாகவும் இருக்குமாம்..

“இன்னும் சிலர் கர்மாவின் மீது பழியைப் போட்டு தங்களுடைய இயலாமையை மறைத்துக் கொள்கிறார்கள். என்ன முயற்சி செய்தாலும் தோல்வியே கிடைக்கிறது, அதுதான் என் தலையெழுத்து என்று தன்னைத்தானே சுருக்கிக் கொள்கிறார்கள்.”

இப்போது நிறைய வீடுகளில் வெற்றிலை கொடி வளர்க்கிறார்கள். வெற்றிலை நன்றாக படர்ந்தால் குடும்பத்தில் சண்டை சச்சரவுகள் வராதாம். தும்பட்டிக்காய். எலுமிச்சம் பழங்களை சிவப்பு அல்லது மஞ்சள். நூலில் கட்டி வீட்டின் நுழைவு வாசலில் தொங்கவிடுகிறார்கள். இவை கண் திருஷ்டியைத் தடுத்துவிடுமாம்.

இன்னும் சிலர் உப்புக்கல், படிகாரம், மஞ்சள் கிழங்கு போன்றவற்றை மூட்டையாகக் கட்டி தொங்கவிடுகிறார்கள். அந்த மூட்டைக்குள் என்ன இருக்கிறது என்பதை வீட்டில் இருப்பவர்களுக்குக்கூட காட்டக் கூடாதாம், சொல்லவும் கூடாதாம். இப்படி செய்தால் செய்யக்கூடிய காரியங்கள் தடை இல்லாமல் நடக்குமாம். அமாவாசைக்கு பூசணிக்காய் சுற்றுவது, தேங்காய் உடைப்பது, சூடம் கொளுத்துவது என்று விதவிதமாக நடக்கிறது” என்றார் மகேந்திரன்.

ஞானகுரு பேசத் தொடங்கினார். ”தங்கள் மீது நம்பிக்கை இல்லாத மனிதர்கள் வேறு வகையில் அதிர்ஷ்டத்தை தேடுகிறார்கள். குறுக்குவழியில் சட்டென கோடீஸ்வரராக மாறிவிட மாட்டோமா என்ற நப்பாசை எல்லோரிடமும் கொட்டிக் கிடக்கிறது. ஒரு செடியை வளர்த்துப் பார்ப்போம், ஒரு தேங்காயை உடைத்துப் பார்ப்போம். அதிர்ஷ்டம் கிடைத்தால் நல்லது, நடக்காவிட்டாலும் முயற்சி செய்துகொண்டே இருப்போம் என்ற மனப்பான்மை மக்களிடம் பெருகிவருகிறது. அதைவிட முக்கியமாக, நம்மைவிட பக்கத்து வீட்டுக்காரருக்கு மட்டும் அதிர்ஷ்டம் அடித்துவிடக் கூடாது என்ற பொறாமை காரணமாகவும் வீடு தோறும் இப்படிப்பட்ட காரியங்கள் நடக்கின்றன.

இன்னும் சிலர் கர்மாவின் மீது பழியைப் போட்டு தங்களுடைய இயலாமையை மறைத்துக்கொள்கிறார்கள். என்ன முயற்சி செய்தாலும் தோல்வியே கிடைக்கிறது, அதுதான் என் தலையெழுத்து என்று தன்னைத்தானே சுருக்கிக் கொள்கிறார்கள். இவர்கள் செடியின் மீது வைத்த நம்பிக்கையை தங்களுடைய திறமையின் மீதும், முயற்சியின் மீதும் வைத்திருந்தால் அடுத்த கட்டத்துக்கு நகர்ந்திருப்பார்கள்.

மந்திரமும் மாந்தீரிகமும் யாருக்கும் பலன் கொடுக்காது என்பதே உண்மை. அதைவிட, இவர்கள் அனைவரும் ஒரு வகையில் குற்றவாளிகள். அதாவது தேங்காய், பூசணிக்காய் போன்ற உணவுப் பொருட்களை ரோட்டில் போட்டு வீணடிக்கும் மனப்பான்மையில் அறிவுக்கண் திறக்கவே செய்யாது..” என்றார்.

’’எப்படியாவது பணக்காரராக வேண்டும் என்றால் வேறு என்னதான் வழி..?”

‘’என்ன வேலை செய்தாலும் பரவாயில்லை, அந்த வேலையை முழு ஈடுபாட்டுடன் செய்ய வேண்டும். முழு திருப்தி கிடைக்கும் வரையிலும் அந்த வேலையை செய்ய வேண்டும். ஒரு நேரத்தில் ஒரு வேலை மட்டுமே செய்ய வேண்டும். செய்வதை தெளிவாகவும் உறுதியாகவும் செய்தால் நிச்சயம் பணம் வந்துவிடும். அதேநேரம் பணத்துக்காக எந்த வேலையும் செய்ய வேண்டாம். ஏனென்றால் பணம் மட்டுமே வாழ்க்கை இல்லை. மேலும், பணம் யாரிடமும் நிரந்தரமாக தங்குவதும் இல்லை.

அதிக பணம்தான் வேண்டும் என்றால், அதற்காக கடினமாக உழைக்க வேண்டும், புத்திசாலித்தனமாக திட்டமிட வேண்டும். தோல்வியை ஏற்றுக்கொள்ளாமல் போராட வேண்டும். அப்போதுதான் பணம் தேடி வரும். செடிகளில் பணம் ஒருபோதும் காய்ப்பதில்லை…” என்று சிரித்தார் ஞானகுரு.

அந்த சிரிப்பில் மகேந்திரனும் கலந்துகொண்டார்.

www.gyanaguru.com

# மத்தவங்க என்ன நினைப்பாங்க..?

சந்தியாவுக்கு சினிமாவில் நுழைந்து நடிகையாக வர வேண்டும் என்று ஆசை. நிறம், உடலமைப்பு, தமிழ் உச்சரிப்பு, நுனிநாக்கு ஆங்கிலம், மனப்பாடமாக வசங்களை பேசுவது, குரல் வளம் போன்றவை அவளுடைய பிளஸ். ஆகவே ஆசையை தந்தையிடம் சொன்னபோது, 'நீ அழகா இருக்கேங்கிறது உண்மைதான். உன்னால ஜெயிக்க முடியும். ஆனா, மத்தவங்க என்ன நினைப்பாங்க...?' என்று எதிர்க்கேள்வி கேட்டார்.

சுப்பிரமணிக்கு விதவிதமாக சமைப்பதில் ஆர்வம். கேட்டரிங் படித்து மிகப்பெரிய ஹோட்டலில் செஃப் ஆக பணியாற்ற வேண்டும் என்று குடும்பத்தில் சொன்னதும் வந்த பதில், 'மத்தவங்க என்ன நினைப்பாங்க...?' என்பதுதான்.

தன்னுடன் பணியாற்றும் லாரன்ஸை திருமணம் முடிக்கப் போவதாக அழகுமலர் சொன்னதும், 'மதம் மாறி கல்யாணம் செஞ்சா மத்தவங்க என்ன நினைப்பாங்க..? என்று சொல்லியே தடுத்தார்கள்.

இப்படித்தான், நிறைய மனிதர்களின் வாழ்க்கையையும் எதிர்காலத்தையும் மற்றவர்கள் மாற்றி அமைக்கிறார்கள்.


மனைவியின் கையைப் பிடித்துக் கொண்டு ரோட்டில் நடப்பதற்கு ஆசை இருந்தாலும் தயக்கம் வருகிறது. கேட்டால், மத்தவங்க பாத்தா என்ன நினைப்பாங்க..? ஆசைப்பட்ட குச்சி ஐஸை வாங்கி ருசிப்பதற்கு தயக்கம்... கேட்டால், மத்தவங்க என்ன நினைப் பாங்க..? கழுத்து முதல் கால் வரையும் மூடியிருக்கும் நைட்டி என்றாலும், அதனை அணிந்துகொண்டு வெளியே நடந்துபோய் குப்பை கொட்டுவதற்கும் தயக்கம். கேட்டால், மத்தவங்க என்ன நினைப்பாங்க..?

அதுசரி, யார் அந்த மத்தவங்க...?

குடும்பத்தின் நெருங்கிய உறவுகள் என்று எண்ணிப் பார்த்தால் அதிகபட்சம் 20 பேரைத் தாண்டாது. நட்பு வட்டாரத்தில் நெருங்கியவர்கள் எண்ணிக்கை பத்தை தாண்டாது. வேலை பார்க்கும் இடங்களில், அக்கம்பக்கம் என்று பார்த்தாலும் 10 பேரை தாண்டாது.



மனிதர்கள் பல விதம். ஒவ்வொரு நபருக்கும் ஒரு குணம், ஒரு ரசனை, ஒரு ஆசை உண்டு. ஒருவருக்கு பிடித்த சுவை இன்னொருவருக்குப் பிடிக்காது. ஒருவரை கவர்ந்த திரைப்படம் வேறு ஒருவருக்கு கழுத்தறுப்பாக உள்ளது.



இவற்றை தாண்டி மற்ற மட்டங்களில் 10 பேர் என்று பார்த்தாலும், ஒட்டுமொத்தமாக இந்த 50 பேருக்காகத்தான் வாழ்கிறீர்களா..?

நீங்கள் நல்லவர், வல்லவர் என்பதை இந்த 50 பேரும்தான் உறுதி செய்ய வேண்டுமா.? இவர்களில் எத்தனை பேர் உங்களுடைய கஷ்டமான காலங்களில் துணை நின்றார்கள்..? இவர்களில் எத்தனை பேர் உங்களுக்குத் தேவையான நேரங்களில் கடன் கொடுத்து உதவியிருக்கிறார்கள்..? இவர்களில் எத்தனை பேர் நீங்கள் கேட்காமலே வந்து ஆலோசனை கூறி உங்கள் உயர்வுக்கு வழி காட்டியிருக்கிறார்கள்..? எத்தனை பேர் தேவையான நேரங்களில் ஆறுதல் கூறியிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட மனிதர்களிடம் அங்கீகாரம் பெறுவதற்காகத்தான் உங்கள் சந்தோஷங்களை அடமானம் வைக்கப்போகிறீர்களா..? இவர்கள் முன்பு அவமானப்படுவது கௌரவக் குறைச்சலாகத் தெரிகிறதா..? இவர்களிடம் சர்டிஃபிகேட் வாங்குவதற் காகத்தான் உங்கள் குடும்பத்தினரின் ஆசை களுக்கும் கனவுகளுக்கும் தடை போடுகிறீர்களா..? தேவையே இல்லை.

நீங்கள் இப்படித்தான் இருக்க வேண்டும், இப்படித்தான் வாழ வேண்டும், இந்த வழியில்தான் செல்ல வேண்டும் என்று சொல்வதற்கு மத்தவங்க யாருக்கும் எந்த உரிமையும் இல்லை. உங்கள் வாழ்க்கையில் யாரெல்லாம் வர வேண்டும், வரக்கூடாது என்பதை வேறு எவரும் தீர்மானிக்கக் கூடாது.

மனிதர்கள் பல விதம். ஒவ்வொரு நபருக்கும் ஒரு குணம், ஒரு ரசனை, ஒரு ஆசை உண்டு. ஒருவருக்கு பிடித்த சுவை இன்னொருவருக்குப் பிடிக்காது. ஒருவரை கவர்ந்த திரைப்படம் வேறு ஒருவருக்கு கழுத்தறுப்பாக உள்ளது. ஏன், ஒருவருக்கு பிடித்த பூவின் மணமே வேறு ஒருவருக்கு தலைவலி கொடுக்கிறது. இப்படி இருக்கும்போது, அந்த 50 பேருக்கும் பிடித்த மாதிரி உங்களால் வாழ முடியுமா? மத்தவங்க விமர்சனங்களுக்குப் பயந்து ஒளிந்து இருக்கலாமா..?

இது உங்கள் வாழ்க்கை. உங்களுக்கு எது சரியென தோன்றுகிறதோ அதை செய்யுங்கள். மற்றவர்களுக்காக உங்கள் ஆசையை மறைத்து வைக்காதீர்கள். ஏனென்றால், மனித வாழ்க்கை என்பது மிகவும் குறுகியது. எந்த நேரத்திலும் மரணம் வந்து எட்டிப் பார்க்கலாம். அதுவரை ஆசைப்பட்ட வாழ்க்கையை வாழ்ந்து பாருங்கள். மத்தவங்களைத் தூக்கி குப்பையில் போடுங்கள்.

உங்கள் பாதை தவறாக இருந்தாலும் பரவாயில்லை, அந்த தவறை நல்ல அனுபவமாக எடுத்துக்கொண்டு, தவறுகளை திருத்திக்கொண்டு முன்னோக்கிச் செல்லுங்கள்.

வாழ்க்கை என்பது ஒரே ஒரு முறை. அதை பிறருக்காக வீணாக்கிவிடாதீர்கள்.

மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமானால், 'மத்தவங்க என்ன நினைப்பாங்க?' என்ற சிந்தனையை தடுத்து நிறுத்துங்கள். பிறரது விமர்சனங்களுக்கு மதிப்பு கொடுக்காதீர்கள். இந்த பூமியில் இயேசு, புத்தர், காந்தி போன்றவர்களும் விமர்சனங்களுக்குத் தப்பியது இல்லை. ஆகவே, மத்தவங்க என்ன நினைப்பார்கள் என்பது உங்கள் கவலை இல்லை.

உங்கள் முயற்சியால் வெற்றி கிடைத்தாலும் தோல்வி கிடைத்தாலும், அதுவே மகிழ்ச்சி.

## மந்திரச்சொல்

இலக்கைவிட,
அதை நோக்கிய
பயணம் மீது நேசம்
வையுங்கள்.
ஏனென்றால்,
பயணமே இலக்கு.





# அதோ அந்த பறவை போல வாழ வேண்டும்..!

மற்ற உயிரினங்களிடமிருந்து மனிதன் மட்டுமே மாறு பட்டு வாழ்கிறான். அதனாலே அவனுடைய வாழ்க்கை பயணத்தில் எக்கச்சக்க ஏற்றத் தாழ்வுகளை சந்திக்க வேண்டி யிருக்கிறது. வாழ்க்கை ஒரே நேர்க்கோட்டில் பயணிக்க வேண்டு மென ஆசைப்படுபவர்கள் பறவை போல் வாழ்ந்தாலே போதும்.

இதோ பறவை சொல்லித்தரும் பாடங்கள்.

- பறவைகள் இரவு நேரம் எதுவும் சாப்பிடுவதில்லை, இரவு நேரங்களில் ஜாலியாக ஊர் சுற்றுவதில்லை. இயற்கைக்கு எதிராக ஒருபோதும் செயலாற்றுவது இல்லை.
- தன் பிள்ளைகளுக்கு தக்க சமயத்தில் வாழ்க்கைக்கான பயிற்சிகளை அளிக்கின்றன. குழந்தைகளுக்கு பரிபூரணமான அன்பை கொடுத்து வளர்க்கின்றன.
- எவ்வளவு தானியங்களை இட்டு கொடுத்தாலும், தனது அத்தியாவசியத்துக்குத் தேவையானதை மட்டுமே எடுத்துக் கொள்கிறது. நிறைய கிடைக்கிறது என்பதற்காக ஒருபோதும் மூக்குமுட்ட உண்ணுவதில்லை. நாளைக்குத் தேவையென சேமித்து வைப்பதில்லை.
- தனது கூடு மற்றும் சுற்றுச் சூழல்களை பாதுகாக்கின்றன. தன்னால் இன்னும் சில கூடுகள் கட்ட முடியும் என்றாலும், அப்படி கூடுதலாக கூடு கட்டி வாடகைக்கு விடுவதில்லை.
- ஒருபோதும் தனது மொழியினை மாற்றி வேற்று மொழி கலந்து பேசுவதில்லை. மற்ற பறவைகளுடன் ஒப்பிட்டு தங்களைத் தாங்களே தாழ்த்திக்கொள்வதில்லை.
- நோய் வந்தால் மருத்துவமனை தேடிச் செல்வதில்லை. உணவு எடுத்துக்கொள்வதை நிறுத்திவிடுகிறது. உடல் குணமான பிறகே உணவு எடுத்துக்கொள்கிறது. இப்படி பறவைகளின் வாழ்க்கையை பார்த்து, அதன் வழியில் நடக்கத் தொடங்குபவருக்கு ஒருபோதும் துன்பம் நெருங்குவதில்லை.



ஞானகுரு தரிசனம்

# ஜாதியை ஒழிக்கும் வழி



ஞானகுருவுக்கு அருகில் வந்து நின்றான் வைத்தியநாதன். அதிகாலையில் குளித்து முடித்து வேஷ்டி, சட்டையில் அடக்க ஒடுக்கமாக நின்று கொண்டிருந்த இருபது வயது இளைஞனைப் பார்க்க சந்தோஷமாக இருந்தது.

”தம்பி... சிகரெட் வைத்திருக்கிறாயா?” என்று அவனை சீண்டினார் ஞானகுரு. அவனோ கொஞ்சம்கூட அசராமல், “இதோ... வாங்கிட்டு வர்றேன் சாமி, என்ன பிராண்ட்?” என்று பணிவாகக் கேட்டு ஞானகுருவை அசரடித்தான்.

”அட போப்பா, ஒரு சிகரெட்கூட வைச்சுக்காம என்ன பையன் நீ... போகும் வழியில் வாங்கிக் கொள்ளலாம்” என்றபடி எழுந்தார் ஞானகுரு.

”இல்லை சாமி... நான் அதெல்லாம் குடிக்கற தில்லை...” என்று பொறுப்பாகப் பதில் சொன்னான். எதுவும் பேசாமல் சிற்றருவியை நோக்கி நடந்தார். கொஞ்சநேரத்திலேயே ஞானகுருவுக்கு மூச்சு வாங்கியது. அதனால் பாதையை விட்டு விலகி பாறையின் மீது அமர்ந்தார். வைத்தியநாதன் கொஞ்சம் தள்ளி நின்றபடி பேசத் தொடங்கினான்.

”சாமி... சின்ன வயசுல இருந்தே குற்றாலீஸ்வரன் கோயிலுக்குப் போயிட்டு இருக்கேன். கோயிலுக்குள்ளே இருந்தே பார்க்க முடிஞ்ச அருவி, அந்த அருவியின் வாசனை, அருவியின் சப்தம் எல்லாமே கடவுளா தெரிஞ்சது. கோயில் சந்நிதானத்துக்குள்ள தீபாரதனை காட்டும்போது, கடவுளைப் போலவே எங்க அப்பாவும் பளபளன்னு மின்னுவார். அதைப் பார்த்ததில் இருந்து எனக்கும் கடவுளைத் தொட்டு அபிஷேகம் செய்யவும், ஆராதனை செய்யவும் ஆசையா வந்திருச்சு. ஆனா, எங்கப்பா என்னய புரிஞ்சுக்கவே இல்லை. அப்பா எதுக்காக உங்ககிட்ட என்னய அனுப்பியிருக் கார்ன்னு தெரியும். ஆனாலும், நீங்க எனக்குத்தான் உதவணும். நீங்க சொன்னா அப்பா கேட்பார். எனக்கு படிப்பு ஏறலை.. பிடிக்கலை... வேண்டாமே...” என்று மெல்லிய குரலில் சொல்லி முடித்தான்.

எந்த பிரதிபலனும் எதிர்பார்க்காமல், முழுமையாக கடவுளுக்குத் தன்னையே அர்ப்பணித்துக் கொள்ள விரும்பும் வைத்தியநாதன் விசித்திரமாகத் தெரிந்தான். இன்னும்

www.gyanaguru.com
www.gyanaguru.com

முழுமையாக அவனைப் பற்றித் தெரிந்துகொள்ள விரும்பினார் ஞானகுரு.

”நீ இதுவரை ஏதாவது தப்பு செய்திருக்கிறாயா?”

கொஞ்சநேரம் யோசித்தான். “அம்மா, அப்பா சொன்னபடி கேட்காம இருக்கிறதும் தப்புத்தான், அப்படிப் பார்த்தா பள்ளிக்கூடம் போறேன், ஸ்பெஷல் கிளாஸ் போறேன்னு சொல்லிட்டு கோயில், அருவின்னு சுத்தியிருக்கேன். ஆனாலும் எப்படியோ படிச்சு பாஸாயிடுவேன். எனக்கு குடுக்கிற காசுல சாமிக்கு கற்பூரம், பூ வாங்கி வைச்சிட்டு, சாக்லேட் வாங்கி சாப்பிட்டதா பொய் சொல்லியிருக்கேன். பூசாரி இல்லாதப்ப, சாமி சிலையை தொட்டுக் கும்பிட்டிருக்கேன்... இதுபோல இன்னும் ஏதாவது இருக்கலாம். ஆனா, நினைவுக்கு வரலையே சாமி...” என்றான்.

”நாயன்மார்கள், ஆழ்வார்கள் வரிசையில் நீயும் கடவுளுக்கு தீவிர பக்தனாக மாற வேண்டும் என்று ஆசைப்படுகிறாய்... அவ்வளவுதானே?” என்று சிரித்தபடி கேட்டதும் பதறினான்.

”அப்படியெல்லாம் கேலி செய்யாதீங்க சாமி. நான் ஒரு சாதாரணமானவன், என்னமோ என் ஆசையெல்லாம் எப்பவும் கடவுள் சிலைகிட்டே இருக்கவும், அருவியை பாத்துக்கிட்டே இருக்கிறதும்தான்.” என்றான்.

”யாரையாவது காதலித்திருக்கிறாயா?”

”என் தங்கச்சி தவிர வேறு எந்த பொண்ணுகிட்டேயும் பேசமாட்டேன் சாமி. சொந்தக்காரங்க வந்தாலும் அதிகம் பேசுறதில்லை. காதல் எல்லாம் தப்பு”

”ஏன்..?”

அவன் பதில் சொல்லாமல் நின்ற நேரத்தில் ஏராளமான குரங்குகள் மரங்களில் இருந்து தாவி வந்து சேர்ந்தன, ஏதாவது தின்பதற்குக் கிடைக்குமா என்று எங்களைச் சுற்றிப் பார்த்தது.

”வைத்தியநாதா... அடிவாரத்திற்குப் போய் பொரி, இட்லி என ஏதாவது கிடைத்தால் வாங்கி வாயேன்...” என்று அனுப்பி வைத்து, ஒரு குரங்கை அருகே அழைத்தார். ஞானகுருவுக்கு குரங்கிடம் பயம் இல்லை, அதற்கும் பயம் இல்லை. ஒன்று அருகே வந்து அமர்ந்தது. இன்னும் ஒன்று ஞானகுருவின் மேல் தாவியேறியது, தடவிக் கொடுத்தபடி இருந்தார்.

அந்த நேரத்தில், அடிவாரத்தில் இருந்து இளைஞன் ஒருவன் அவசர அவசரமாக மலையேறி வந்தான். வழக்கமாக குளிக்கப் போகிறவர்களைப் போன்ற உடையும் இல்லை, சந்தோஷ நடையும் இல்லை. குரங்குகள் படைசூழ இருந்த ஞானகுருவைப் பார்த்ததும் கணநேர அதிர்ச்சி, அவன் கண்ணில் தெரிந்தது. ஆனால், சுதாரித்துக்கொண்டு வேகமாக ஏறத் தொடங்கினான்.

”உன் பையில் இருக்கும் உணவைக் கொடுத்துவிட்டுப் போ...’’ என்று அவனை நோக்கி சப்தமாக ஞானகுரு சொன்னதும்... காது கேட்காதவன் போன்று செல்ல முயன்றவன், கொஞ்ச நேர தயக்கத்துக்குப் பின் திரும்பி வந்தான். பதட்டத்தோடு பையில் இருந்து உணவுப் பொட்டலத்தை எடுத்து கீழே வைத்தான். அந்த பைக்குள் சிகரெட் பாக்கெட், புத்தகங்கள், குட்டி ரேடியோ, செல்போன் போன்றவை இருப்பதைக் கவனித்தார் ஞானகுரு. அவனது பதட்டமும் பைக்குள் இருந்த பொருட்களும் அவனைப் பற்றி ஒரு கதை சொன்னது. குரங்குகள் அந்த பொட்டலத்தை நோக்கி பாய்ந்து நகர்ந்து, அபகரித்துக்கொண்டன.

”இங்கு இன்னும் எத்தனை நாள் இப்படி ஒளிந்திருப்பாய்?” என்று அழுத்தம் திருத்தமாய்க் கேட்டார் ஞானகுரு. கேள்வியால் அதிர்ந்தவன் சட்டென்று ஒரு கத்தியை எடுத்து என் எதிரே நீட்டி, “நீங்க யாரு... உண்மையைச் சொல்லுங்க... போலீஸா?’’ என்றான். அவன் நடுக்கத்தை ரசித்தபடி, “உன்னைப் போன்ற சாதாரண குற்றவாளிகளைப் பிடிப்பதற்கு போலீஸ்காரர்கள், மாறுவேடம் போட்டு மெனக்கெடுவார்கள் என்று நினைக்கிறாயா? சிரிப்பு மூட்டாதே...” என்றார் ஞானகுரு

நம்புவதா வேண்டாமா என்று யோசித்தவன் மீண்டும், “நீங்க போலீஸ் இல்லையே...” என்று கேட்டான்.

”சினமென்னும் பாம்பு இறந்தால் தாண்டவக்கோனே!
யாவுஞ் சித்தியென்றே நினையேடா தாண்டவக்கோனே...”
என்ற இடைக்காடர் சித்தரின் பாடலை வாய்விட்டுப் பாடினார் ஞானகுரு. அவனுக்கு அர்த்தம் புரியவில்லை என்றாலும், நம்பிக்கை வந்தது.

”நீங்க புதுசா வந்திருக்கிற சாமியாரா?” என்றான்.

ஞானகுரு பதில் சொல்லாமல் அவனைப் பார்த்து, “உன்னைப் பற்றிச் சொல்...” என்றார் கட்டளையாக.

“சாமி... என் பேரு பாலுச்சாமிங்க. திருநெல்வேலி பக்கத்துக் கிராமம். தாழ்த்தப்பட்ட ஜாதியைச் சேர்ந்த ஏழைக் குடும்பம். எங்க குடும்பத்தில இதுவரைக்கும் யாரும் காலேஜ் போனதில்லை, ஆனா நான் காலேஜ் முடிச்சுட்டு மேலயும் படிச்சு ஐ.ஏ.எஸ். முடிக்க ஆசைப்பட்டேன். ஆனா, நான் வெளியூர்ல காலேஜ் படிக்கிறபோதே, எங்க ஊருக்கு எப்ப திரும்பி வந்தாலும் வேற ஜாதிக்காரங்க கிண்டல் பண்ணுவாங்க... வம்பு இழுப்பாங்க. நானும் முடிஞ்சவரை பேசாமத்தான் இருப்பேன். ஆனா... போனவாரம் கொஞ்சம் வரம்பு மீறிப் பேசிட்டாங்க. என்னால தாங்க முடியலை, விஷயத்தை எங்க ஆளுங்ககிட்ட சொன்னதும் அவங்களும் ஆவேசமாயிட்டாங்க. அவங்க இடத்துக்கே போய் சண்டை இழுத்து இரண்டு பேரை வெட்டி சாய்ச்சிட்டோம்...

இனிமே அங்கே இருந்தா ஆபத்துன்னு இங்கே வந்துட்டேன். மத்தவங்க ஆளுக்கொரு பக்கம் போயிட்டாங்க. ஊர்ல எங்க அப்பன், ஆத்தாவெல்லாம் என்ன பாடு படுறாங்கன்னு தெரியலை. இப்போ எங்க ஜாதிச் சங்கத்தோட உதவியால, ராத்திரி மட்டும் கீழே ஒரு வீட்ல படுத்துத் தூங்கிட்டு, காலையில் மலைக்கு மேல ஒளிஞ்சுக்குவேன். அவங்கதான், ‘பயப்பட வேண்டாம், கேஸை நாங்க பாத்துக்கிடுறோம். நாங்க சொல்றவரைக்கும் வெளியே தலை காட்டாதே’ன்னு சொல்லி இருக்காங்க...” என்று பேச்சை நிறுத்தியவன் கண்களில் நீர் வழிந்தது.

மந்திரச்சொல்

நம்மை
போலவே பிறரும்
இருக்கவேண்டும்
என்று விரும்புவது,
மிகப்பெரிய
முட்டாள்தனம்.



“அவன் நடுக்கத்தை ரசித்தபடி, “உன்னைப் போன்ற சாதாரண குற்றவாளிகளைப் பிடிப்பதற்கு போலீஸ்காரர்கள், மாறுவேடம் போட்டு மெனக்கெடுவார்கள் என்று நினைக்கிறாயா? சிரிப்பு மூட்டாதே...” என்றார் ஞானகுரு”



”சுதந்திரமாக ஜெயிலில் இருப்பதற்குப் பயந்து, காட்டுக்குள் கைதியாக இருக்கிறாய். அப்படித்தானே..?”

’’நான் செஞ்சது தப்புத்தான். ஆனா... அவங்கதான் என்னைத் தூண்டினாங்க...”

‘சதுர்வர்ணயம் மயா ஸ்ருஷ்டம் குணகர்ம விபாகச

தஸ்யகர்த்தாரமா மாம் வித்ய கர்த்ததார மவ்யம்”

’’சாமி நீங்க என்ன சொல்றீங்கன்னு புரியலை...’’ பவ்யமாகக் கேட்டான்.

”பகவத் கீதையில் கிருஷ்ணர் சொன்னது இது. மனிதர்களில் பல ஜாதிகளைப் படைத்த தன்னால்கூட, அதை மாத்தமுடியாதுன்னு சொல்லியிருக்கிறார். நீ வன்முறையால் மாற்றப் போகிறாயா?”

”கடவுளே அப்படிச் சொல்லியிருக்காரா... அப்படின்னா நாங்க காலங்காலமா அடிமையாத்தான் இருக்கணுமா?”

”கடவுள் என்ற பெயரில் பகவத் கீதையை எழுதியவர்கள், ஜாதிப் பிரிவுகளைத்தான் நீக்க முடியாது என்று சொல்லி இருக்கிறார்கள், ஆனால் மனிதன் நினைத்தால் சாதிகளை இல்லாமல் செய்துவிட முடியும். மனித ஜாதி என்பதைத் தவிர வேறு சாதி தேவைதானா...?”

”ஜாதி இல்லைன்னா... எங்களுக்குக் கிடைக்கிற எந்த சலுகையும் கிடைக்காது. நாங்க மட்டும் கடைசிவரை கஷ்டத்தோடயே இருக்கணுமா?”

”எதுவும் ஒரு நாளில் நிகழப்போவதில்லை பாலுச்சாமி. ஆனால் உங்களது பாதை அதை நோக்கிச் செல்வதாக இருக்கவேண்டுமே தவிர, ஜாதியை வலுவேற்றிக் கொள்வதில் அல்ல...”

”சங்கம் வைத்து நாங்கள் ஒற்றுமையாக இருக்கும்போதே எங்களுக்கு சிரமம் தருபவர்கள், தனித்தனியாக இருந்தால் சும்மா இருப்பாங்களா சாமி... தலையிலேயே மதிச்சுடுவாங்க...” என்றான் ஆத்திரத்துடன்.

”உன்னுடைய சங்கம் திடீரென உன்னைக் கைவிட்டால் என்ன செய்வாய்?”

”அப்படியெல்லாம் செய்ய மாட்டாங்க...” என்றான்.

”உன்னால் சங்கத்துக்குப் பாதிப்பு வருமென நினைத்து, உன்னைக் காட்டிக் கொடுத்தால் என்ன செய்வாய்?”

தலையைக் குனிந்தபடி இருந்தவன், “இரண்டு பேரைக் கொன்னாச்சு... காட்டிக் கொடுக்கிறவனையும் போட்டுத்தள்ள வேண்டியதுதான்...” என்றான்.

”ஆஹா... நன்றாக சிந்திக்கிறாய். இருவரைக் கொன்றதற்கே இப்படிக் காட்டுக்குள் திரிகிறாய், இன்னும் கொலைகள் செய்தபின் எங்கே போவாய்? சொர்க்கம், நரகம் என்பதெல்லாம் அடுத்த ஜென்மத்தில் கிடையாது. இதோ இப்போது நீ பயந்து ஒளிந்துகொள்ளும் இடத்தில்தான் இருக்கிறது நரகம்”

”சாமி... ஒரு வாரம் இந்த மலையில் ஒளிந்துகிடப்பதே எனக்குப் பெரிய வேதனையாக... தண்டனையாகத்தான் இருக்கிறது. என்ன செய்வதுன்னு நீங்களாவது வழி காட்டுங்கள்...” என்று கேட்டான் பாலுச்சாமி.

”அதோ வருகிறானே, அவன் போலீஸ் என நினைக்கிறேன். குத்திக் கொன்றுவிடு...” என்று சொன்னதும் பதறிப்போய், இடுப்பில் செருகியிருந்த கத்தியை மறுபடியும் ஆவேசமாக எடுத்தான். கத்தியுடன் நிற்கும் ஒருவனது ஆக்ரோஷத்தைப் பார்த்து அதிர்ந்து தூரத்திலேயே நின்றுவிட்டான், வைத்தியநாதன்.


www.gyanaguru.com

# ஏழைகளுக்கு பசி பணக்காரர்களுக்கு ருசி

இந்த உலகில் பெரும்பான்மையான மக்கள் உணவுக்காக கடுமையாக உழைக்கிறார்கள். ஆனாலும், அவர்களுக்கு குறைந்த அளவே உணவு கிடைக்கிறது. அந்த உணவு கிடைப்பதும் பெரிய போராட்டமாக இருக்கிறது. பசி ஒவ்வொரு வேளையும் ஏழைகளை துரத்திக்கொண்டே இருக்கிறது. பசிக்காக இடம்பெயர்கிறார்கள்,. மாநிலங்கள் கடக்கிறார்கள், நாடுகள் கூட பறந்து செல்கிறார்கள்.

அதேநேரம், குறைந்த எண்ணிக்கையில் இருக்கும் பணக்காரர்கள் மலை போல பல தலைமுறைகளுக்கு சொத்து சேர்த்துக்கொள்கிறார்கள். இவர்கள் பசி என்பதை உணர முடியாத நிலையில் வாழ்கிறார்கள். ஒவ்வொரு வேளையும் விதவிதமாய் சாப்பிடு கிறார்கள். புதிது புதிதாய் உணவை தேடித்தேடி தின்கிறார்கள். பல மணி நேரம் அது பற்றி சிலாகித்து பேசுகிறார் கள். தின்பதற்காகவே, மாநிலங்கள், நாடுகள் பறந்து செல்கிறார்கள். தின்று தின்று பல மடங்கு உடல் வீங்குகிறார்கள்.

ஒரு பெரும் பணக்காரனின் உணவு மேஜையில் விதவிதமான உணவு, பழரசங்கள், இனிப்புகள் என அடுக்கப்படுகிறது. அவன் அவற்றில் கொஞ்சமாக சாப்பிட்டுவிட்டு நகர, மற்றவை அப்படியே குப்பைக்குச் செல்கிறது. அதே வீட்டில் வேலை செய்யும் ஏழைக்கு அந்த மிச்சமான உணவு போய் சேர்வதில்லை. அவன் ஒரு வேளை சோறுக்காக நாயாய் பாடுபட வேண்டியிருக்கிறது.

இந்த இரண்டு வகையான மனிதர்களில் யாருடைய பசிக்கு முன்னுரிமை கொடுப்பது என்ற கேள்விக்கு விடையாக வந்திருக்கும் திரைப்படமே ‘ஹங்கர்’.

பசியை தீர்ப்பதற்கு ஏழைகள்











www.gyanaguru.com

# மந்திரச்சொல்

மற்றவர்கள் நம்மைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பது முக்கியமல்ல. நாம், நம்மைப் பற்றி என்ன நினைக்கிறோம் என்பதே முக்கியம்.

> வெற்றி அடைந்த மனிதர்களை ஜெராக்ஸ் எடுத்து வாழ்ந்தால், தாங்களும் ஒரு ஸ்பெஷல் நபராக மாறிவிட முடியாதா என்ற ஏக்கம் ஏழைகளிடம் நிரம்பிவழிகிறது. அப்படித்தான் 'ஹங்கர்' நாயகி ஆவொய் ஒரு கனவு காண்கிறாள். அந்த கனவு நனவாகிறதா என்பதே ஹங்கர் படத்தின் கதை.







விதவிதமாக யோசிக்கிறார்கள். உறவுக்குள் யாரேனும் ஒருவர் வெளிநாட்டுக்குப் போய் வேலை செய்கிறார் என்றால், மற்றவர்களுக்கும் வெளிநாட்டில் போய் பணம் சம்பாதிக்கும் ஆசை வந்துவிடும். அதேபோல் பக்கத்து வீட்டுக்காரர் வாரம் தோறும் ஹோட்டலில் சாப்பிடுகிறார் என்றால், அக்கம்பக்கத் தினருக்கும் ஹோட்டலில் சாப்பிடும் ஆசை வந்துவிடும்.

வெற்றி அடைந்த மனிதர்களை ஜெராக்ஸ் எடுத்து வாழ்ந்தால், தாங்களும் ஒரு ஸ்பெஷல் நபராக மாறிவிட முடியாதா என்ற ஏக்கம் ஏழைகளிடம் நிரம்பிவழிகிறது. அப்படித்தான் 'ஹங்கர்' நாயகி ஆவொய் ஒரு கனவு காண்கிறாள். அந்த கனவு நனவாகிறதா என்பதே ஹங்கர் படத்தின் கதை.

தாய்லாந்து மொழியில் வெளியாகியிருக்கும் இந்த திரைப்படம் உலகமெங்கும் பெருவெற்றி அடைந்துள்ளது. படத்தின் திரைக்கதையைவிட, ஆங்காங்கே தூவப்பட்டிருக்கும் வசனங்கள் வாழ்க்கையின் நிஜத்தை தோலுரித்துத் தொங்கவிடுகிறது.

- சமையலறையில் ஒருபோதும் ஜனநாயகம் இருக்கமுடியாது. சர்வாதிகாரமே சரி.
- வாழ்வது ஒரு முறை என்பது சரியல்ல, ஒரு முறை மட்டுமே சாகிறோம்.
- எல்லோரும் பசியுடன் இருக்கிறார்கள் என்றாலும் ஒவ்வொருவரின் பசியும் வித்தியாசமானது.
- நீங்கள் என்ன சாப்பிடுகிறீர்கள் என்பதைப் பொறுத்தே உங்களுடைய சமூக அந்தஸ்து தீர்மானிக்கப்படுகிறது.
- எப்போதும் அதிக பசியுடன் இருப்பவர்களே வெற்றியாளராக இருக்கிறார்கள்.
- ஏழையாக இருக்கும்போது பசியை அடக்குவதற்கு சாப்பிடுகிறார்கள். சம்பாதிக்கத் தொடங்கிய பின்னர் அவர்களுடைய பசி அடங்குவதே இல்லை.
- தினமும் கொல்லப்படும் கோழியின் உயிர், அரிய பறவையின் உயிரை விட மட்டமானதா..?
- விலை உயர்ந்த, உன்னதமான நிறைய உணவுகள் ஹோட்டலில் இருக்கலாம். ஆனால், இவற்றால் ஒருபோதும் வீட்டு உணவை தோற்கடிக்க முடியாது.

இதுபோன்று படம் முழுவதும் நறுக் சுறுக் வசனங்கள் சுற்றிச்சுழல்கின்றன. குடும்பத்தினர் நடத்திவரும் சின்னஞ்சிறிய ரெஸ்டாரெண்டில் நூடுல்ஸ் ஸ்பெஷலிஸ்ட்டாக இருக்கிறார் நாயகி ஆவொய். போதிய வருமானமும் அங்கீகாரமும் இல்லாமல் தடுமாறுகிறாள்.

அவளுடைய உணவகத்தில் சாப்பிட வரும் டோன், தீயுடன் விளையாடும் நாயகியின் திறமையைக் கண்டு வியக்கிறான். 'உன்னைப் போல் ஒருத்தி எங்களுடன் இருக்க வேண்டும். உனக்கு விருப்பமென்றால் வந்து பார்' என்று விசிட்டிங் கார்டு கொடுத்துவிட்டுப் போகிறான்.

அது, ஹங்கர் என்ற பெயரில் பிரபல செஃப் பால் நடத்திவரும் பிரபலமான சமையல் கூடம். பணக்காரர்களுக்கு மட்டுமே பிரத்யேகமாக இயங்குகிறது. அவருடைய சமையலை சாப்பிடுவதற்கு எத்தனையோ பணக்காரர்கள் பணம் கட்டி வரிசையில் காத்திருக்கிறார்கள்.

சமையலில் தன்னாலும் சாதிக்க முடியும் என்று நம்பும் ஆவொய், செஃப் பாலை சந்திக்கிறாள். ஏன் இங்கு சேர வேண்டும் என்று விரும்புகிறாய் என்று கேட்பதற்கு, 'நான் ஒரு ஸ்பெஷல்' என்பதை காட்ட வேண்டும் என்கிறாள்.

ஸ்பெஷலாக மாறுவதற்கு அதிக விலை கொடுக்க வேண்டும் என்கிறார் செஃப் பால். அதன் உண்மையான அர்த்தம் புரியாமல் குழுவில் சேர்கிறாள்.

சமையல் கூடத்தில் செஃப் பால் மிக மிக கறாராகவும், கண்டிப்பாகவும் ஒரு சர்வாதிகாரி போன்று நடந்துகொள்கிறார். சிறிய தவறு செய்பவர்களுக்கும் கடுமையாக தண்டனை கொடுக்கிறார். அதேநேரம் சுவையிலும், உணவின் தரத்திலும் உறுதியாக இருக்கிறார்.

ஒரு பணக்காரன் செஃப் பாலை வரவழைத்து, ஸ்பெஷல் விருந்து சாப்பிட்டுவிட்டு, துப்பாக்கியில் தன் மனைவி, சின்ன குழந்தையையும் கொன்றுவிட்டு, தானும் தற்கொலை செய்துகொள்கிறான். அவனுடைய இறுதி விருப்பம் செஃப் பால் உணவு எனும் அளவுக்கு ஹங்கர் குழுவின் புகழ் கொடி கட்டிப் பறக்கிறது.

சட்டத்துக்குப் புறம்பாக கார்ன்பில் பறவையை ஒரு கோடீஸ்வரர் வேட்டையாடிக் கொண்டுவர, அதை எந்த மறுப்பும் சொல்லாமல் சமைக்கிறார் பால் இதை கண்டு கோபமாகும் நாயகி, ஹங்கர் குழுவிலிருந்து வெளியேறுகிறார்.

ஹங்கருக்கு எதிராக ஒரு குழு அமைப்பதற்கு தயாராக இருக்கும் போட்டியாளர் ஆவொய்க்கு அடைக்கலம் கொடுக்கிறார். புதிய குழுவை உருவாக்குகிறாள் ஆவொய். இப்போது செஃப் பால் மற்றும் ஆவொய் ஆகிய இருவரில் யார் ஸ்பெஷல் என்பதை தீர்மானிக்க வேண்டிய நிலை உருவாகிறது.

ஒரு பணக்காரியின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் இரண்டு பேரையும் வரவழைத்து, போட்டி விருந்து நடத்தப் படுகிறது. வெற்றி அடைய வேண்டும் என்றால் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள், உறவினர்களை கண்டு கொள்ளாமல் வேகமாக ஓட வேண்டும், குறுக்குவழியில் இறங்குவதற்கும் தயங்கக்கூடாது என்பது ஆவொய்க்குத் தெரியவருகிறது. இதையடுத்து நாயகி என்ன முடிவு எடுத்தார் என்று உணவு அரசியலை பேசுகிறது இந்த திரைப்படம்.

பணக்கார வீட்டின் பிரிட்ஜில் இருக்கும் ஒரு பண்டத்தை எப்படியாவது சுவைத்துவிட வேண்டும் என்று சிறுவன் பால் ஆசைப்படுகிறான். யாருமில்லாத நேரம் பிரிட்ஜை திறந்து எடுக்கும்போது, கையும் களவுமாக பிடிபட நேரிடுகிறது. அதற்காக அவனும் அவனது வேலைக்கார தாயாரும் கொடூரமாக தண்டிக்கப்படுகிறார்கள். அப்படிப் பட்ட பணக்காரர்கள் எல்லாம் என் முன்னே நான் போடும் சாப்பாட்டுக்காக காத்திருக்க வேண்டும் என்பதற்காக இந்த வேலையில் ஸ்பெஷல் ஆனேன் என்று செஃப் பால் சொல்லும் முன்கதை சுருக்கம், ஒரு சோக கவிதை.

'பிறருடைய கண்களின் மூலம் கனவு காணக் கூடாது. அவரவர் பசியை அவரே தணித்துக்கொள்ள வேண்டும். அவரவர் தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ப விருப்பமான வழியில் பயணம் செய்வதே மகிழ்ச்சியான வாழ்வுக்கு வழி' என்று நெத்தியடியாகச் சொல்கிறது.

ஒவ்வொருவரும் ருசிக்க வேண்டிய திரைப்படம்.


www.gyanaguru.com



# வேடிக்கை மனிதராக வாழ்வது குற்றமா பாரதி..?

மகாகவி பாரதியின் பாடல்கள் மகத்தானவை. மனதுக்கு மட்டுமின்றி உடலுக்கும் உறுதியும் ஊக்கமும் தருபவை. அவருடைய இந்த கவிதை பலருடைய விருப்பக் கவிதையாக இருக்கிறது.

தேடிச் சோறு நிதந்தின்று - பல
சின்னஞ்சிறு கதைகள் பேசி - மனம்
வாடித் துன்பமிக உழன்று - பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து - நரை
கூடிக் கிழப்பருவம் எய்தி - கொடுங்
கூற்றுக் கிரையெனப்பின் மாயும் - பல
வேடிக்கை மனிதரைப் போலே - நான்
வீழ்வேனென்று நினைத்தாயோ?

- என்று கேள்வி எழுப்புகிறார் பாரதி.

இந்த பாடல் ஒவ்வொரு மனிதரையும் சிந்திக்கத் தூண்டுகிறது, வெற்றியடையச் சொல்கிறது எனும் வகையில் சரியானதே. அதேநேரம், வேடிக்கை மனிதர் என்றால் கேவலமா என்ற கேள்வியும் எழாமல் இல்லை.

ஏனென்றால், வாழ்க்கை என்பதற்கு மிகத்தெளிவான அர்த்தமும் விளக்கமும் யாரிடமும் இல்லை. ஒவ்வொரு நபரின் வாழ்க்கையும் தனித்துவமானது, வித்தியாசமானது. யாருடைய வாழ்வையும் பிறருடன் ஒப்பிட்டு குழப்பிக்கொள்ள முடியாது. மேலும், ஒருவரது வாழ்நாள் எத்தனை நாட்கள் என்பதிலும் ஒவ்வொரு நபருக்கும் வித்தியாசம் இருக்கிறது.

இப்படிப்பட்ட சூழலில் மனிதனாகப் பிறந்த ஒவ்வொரு நபரும் ஏதாவது சாதிக்கத்தான் வேண்டும் என்ற சிந்தனையும் லட்சியமும் முக்கியமானது இல்லை. ஏனென்றால், எந்த ஒரு சாதனையும் நிரந்தரமில்லை, அவசியமும் இல்லை.

பத்து நொடிக்குள் 100 மீட்டர் ஓடிக் கடப்பது சாதனையாக இருக்கலாம். இமயமலை ஏறுவதும், நீருக்குள் நீண்ட நேரம் மூச்சடக்கி இருப்பதும், அதிக எடை தூக்குவதும் சாதனையாக இருக்கலாம். ராக்கெட் விடுவது, புதிய மருந்து கண்டுபிடிப்பதும் நடக்கலாம். இது போன்ற சாதனையாளருக்கும் கிராமத்தில் கூலி வேலை செய்யும் தொழிலாளிக்கும் வாழ்வில் எந்தவொரு வித்தியாசமும் இல்லை என்பதுதான் முக்கியம்.

ஒலிம்பிக் போட்டிகளில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தங்கப்பதக்கம் வென்ற இந்திய வீரர்களின் பெயர்கள் இப்போது யாருக்கும் தெரியாது. மின்சாரம், அலைபேசி, பேனா, வாகனம், தொலைக்காட்சி என்று எத்தனையெத்தனையோ சாதனங்களைப் பயன்படுத்துகிறோம். அவற்றை உருவாக்கியவர் யார், மெருகேற்றியவர் யார் என்பதெல்லாம் யாருக்கும் தெரிவதில்லை. இதையெல்லாம் அறிவதால் புத்திசாலி என்றும் அறியாமல் இருப்பதால் முட்டாள் என்றும் அர்த்தமில்லை.

அவரவர் வாழ்க்கையை அவர்களுக்குப் பிடித்த வகையில் வாழ்வதே போதும். ஏதேனும் சாதனை செய்தே தீர வேண்டும் என்று இன்றைய மகிழ்ச்சியை தள்ளிப் போட்டுக்கொண்டு, எதிர்காலத்துக்கு கஷ்டப்படுவதில் எந்த அர்த்தமும் இல்லை. சாதனையாளராக வாழ்வதை போலவே ஒரு சாமான்யராக, வேடிக்கை மனிதராகவும் மகிழ்ச்சியுடன் வாழலாம்.

மகிழ்ச்சிக்கு எதுவும் தடையில்லை.

# பாத்ரூமை எட்டி பார்க்கலாமா..?



ஒருவரது படுக்கையறையை பிறர் எட்டிப் பார்ப்பது அநாகரீகம். படுக்கையறையே அநாகரீகம் என்றால் பாத்ரூம். மூச்... அதற்குள் தனி நபரைத் தவிர வேறு யாரும் இருக்கவே முடியாது. ஆனால், இப்போது பாத்ரூமுக்குள் அழையா விருந்தாளியாக நுழைந்துவிட்டது செல்போன். மனிதன் தனிமையில் இருக்கும் ஒருசில நிமிடங்களையும் செல்போன் பறித்துக்கொண்டது.

தேவை இருக்கிறதோ இல்லையோ, பாத்ரூம் நேரத்திலும் செல்போனை கையோடு எடுத்துப் போகிறார்கள். பாத்ரூம் மட்டுமின்றி பயணங்களில், வேலை நேரங்களில், தூங்கும்போதும் செல்போன் பார்த்துக்கொண்டே இருக்கிறார்கள்.

அந்த வகையில் சிகரெட், மது, கஞ்சா போன்றவை களைவிட செல்போன் போதை மிக மோசமான பின் விளைவுகள் தரத் தொடங்கிவிட்டது. ஆம், அதிக நேரம் செல்போன் பயன்படுத்துபவர்கள், ஏதோ ஒரு சிக்கலான பாதையில் வாழ்க்கை செல்வது போல் உணர்கிறார்கள். தினமும் வாழ்க்கை பரபரப்பாக நகர்கிறது என்றாலும், அர்த்தமில்லாமல் வாழ்வதாக எண்ணுகிறார்கள். அதோடு, இழக்கக்கூடாத ஏதோ ஒன்றை இழந்துவிட்டது போல் தவிக்கிறார்கள். மேலும், காரணமே இல்லாமல் பதட்டம், கூட்டத்தில் இருந்தாலும் தனிமை உணர்வுடன் இருக்கிறார்கள்.

நீங்கள் அந்த வட்டத்தில் சிக்கியிருக்கிறீர்களா என்பதையறிய, உங்கள் நடவடிக்கையை ஆய்வு செய்து பாருங்கள்.

1. செல்போனை கீழே வைக்க மனமே வருவதில்லை. அப்படி தள்ளி வைத்தாலும், ஏதேனும் அப்டேட் வந்திருக்கிறதா என்று அவ்வப்போது எடுத்து பார்க்கும்


www.gyanaguru.com

ஞானகுரு
மகிழ்ச்சி
டிஜிட்டல் மாத இதழ் 2 - 8

நிறுவனர்
**எஸ்.கே.முருகன்**

ஆசிரியர்
**எம்.நிர்மல்**

வெளியீட்டாளர்
**எம்.நிலா**

வடிவமைப்பு
**வி.கிராபிக்ஸ்**
**கே.எம்.பிரசன்னா**

நிர்வாக இயக்குனர்
**அரசு கிருத்திகா**

முதன்மை செயல் அலுவலர்
**மணியன் கலியமூர்த்தி**

ஒருங்கிணைப்பாளர்
**ரத்தினபாண்டியன்**


**ஞானகுரு பப்ளிகேஷன் மூலம் மகிழ்ச்சி இதழ் வெளியிடப்படுகிறது. அலுவலக முகவரி :**

ஜி2, கோவிந்த் அபார்ட்மென்ட்,
6, ஏஜிஎஸ் காலனி 4வது தெரு,
கொட்டிவாக்கம், சென்னை - 41.
**தொடர்புக்கு:** +91 98409 03586, 72997 53999, 98844 53014
**இ.மெயில் :** skmnila1@gmail.com
**இணையதளம் :** gyanaguru.com











> முதல் கட்டமாக ஆசை காட்டி உள்ளே இழுக்கும் ஆப்களை அன்இன்ஸ்டால் செய்ய வேண்டும். உணவு வேண்டுமென்றால் போய் வாங்கிக்கொள்ள முடியும். செய்திகளில் விருப்பம் என்றால் ஒரே ஒரு தளம் மட்டும் போதும் என்ற கட்டுப்பாட்டுக்குள் வாருங்கள்.

ஆர்வம். சார்ஜ் போட்டிருக்கும் நேரத்திலும் எடுத்துப் பார்த்தல்.

2. கொஞ்சநேரம் வாட்ஸ் ஆப் அல்லது ஃபேஸ்புக்கில் நோட்டிஃபிகேஷன், அப்டேட் வரவில்லை என்றால் பதட்டத்துடன் நெட் கனெக்ஷன், சிக்னல் பிரச்னைகளை ஆராய்ச்சி செய்தல்.

3. பாத்ரூமுக்குள் செல்போன் கொண்டுசெல்வது தவறு என்று தெரிந்தாலும், முக்கியமான கால் வரலாம் என்று தனக்குத்தானே சமாதானம் செய்துகொண்டு கொண்டுசெல்தல்.

4. டிரெண்டிங் என்னவென்பதை அறிந்து கொள்வதற்கு டுவிட்டர், ஃபேஸ்புக், இன்ஸ்டா கிராம், யூடியூப் போன்ற சமூகவலைதளங்களை அவ்வப்போது எட்டிப்பார்த்தல்.

5. தினமும் சரியான நேரத்துக்கு சாப்பிடுவதற்கு விருப்பமின்மை. சாப்பிடும் நேரத்தில் செல்போன் பார்த்தல். தட்டில் என்ன உணவு, என்ன ருசி என்பதை கவனிக்காமல் சாப்பிட்டு முடித்தல்.

6. இரவு எத்தனை மணி நேரம் என்றாலும் நேரம் காலமின்றி செல்போன் பார்த்துக்கொண்டே இருப்பதால், காலையில் குறிப்பிட்ட நேரத்தில் எழுந்து கொள்ள முடியாமல் அவஸ்தைப்படுதல். எழுந்தவுடன் முதல் வேலையாக செல்போனை எடுத்துப் பார்த்தல்.

7. செல்போன் பார்க்கும் நேரத்தில் யார் என்ன கேள்வி கேட்டாலும், பேசினாலும் சட்டென கோபம் எட்டிப்பார்த்தல். தேவையில்லாமல் கோபப்படுகிறோம் என்று தெரியவந்தாலும், அதை ஒப்புக்கொள்ள மறுத்தல்.

8. இன்று என்ன தேதி, என்ன நேரம் என்று யாராவது கேட்டால், சட்டென அதை சொல்லமுடியாமல் பதட்டம் அடைதல்.

9. வேலைகளை உடனுக்குடன் முடிப்பதற்கு மனமின்றி உப்புசப்பு இல்லாத காரணங்களை உருவாக்கி தள்ளிப்போடுவது. அரை மணி நேர வேலைக்கு ஒரு மணி நேரம் மேலாக செலவிட்டும், திருப்தியின்றி செய்துமுடித்தல்.

10. வீட்டுக்கு வரும் உறவினர்கள், நண்பர்களிடம் நீண்ட உரையாடலுக்கு விருப்பமின்மை. விருந்தினர்கள் கிளம்பியதும் மிகப்பெரிய திருப்தியடைதல்.

இந்த 10 அறிகுறிகளில் ஐந்துக்கு மேல் ஒருவருக்கு இருக்கிறது என்றால், அவர் செல்போன் புதைகுழியில் சிக்கியிருக்கிறார் என்று அர்த்தம். இன்றைய தலைமுறையினர் நிறைய பேர் இந்த சிக்கலுக்குள் சிக்கி அவஸ்தைப்படுகிறார்கள். இந்த நிலை தொடரும்பட்சத்தில் ஒவ்வொரு மனிதரும் பாலைவனத் தீவாக மாறிவிடுவார்கள். விரைவில் மன அழுத்தம் போன்ற சிக்கல்களில் சிக்கிவிடுவார்கள். எனவே, செல்போன் வெறியர்கள் உடனடியாக செய்ய வேண்டிய செயல் இதுதான்.

**மந்திரச்சொல்**

யாருக்காகவும் மாற நினைக்காதீர்கள். பின் ஒவ்வொரு மனிதருக்காகவும் மாற வேண்டி யிருக்கும்.

முதல் கட்டமாக ஆசை காட்டி உள்ளே இழுக்கும் ஆப்களை அன்இன்ஸ்டால் செய்ய வேண்டும். உணவு வேண்டுமென்றால் போய் வாங்கிக்கொள்ள முடியும். செய்திகளில் விருப்பம் என்றால் ஒரே ஒரு தளம் மட்டும் போதும் என்ற கட்டுப்பாட்டுக்குள் வாருங்கள். வாட்ஸ் ஆப், மெசேஜ், ஃபேஸ்புக் போன்ற சமூகவலை தளங்களுக்கு வரும் பாப் அப், ரிமைண்டர், அறிவிப்பு ஒலி போன்றவைகளை தூக்கிவிடுங்கள். ஏதேனும் காரணத்தால் பல்வேறு குழுக்களில் இணைந்திருப்பீர்கள். எல்லா குழுக்களிலும் ஒரே செய்திகளே மீண்டும் மீண்டும் வரும். எனவே, தயவுதாட்சண்யம் பார்க்காமல் அனைத்து குழுக்களிலிருந்தும் வெளியேறுங்கள்.

பேசுவதற்கு அழைப்பு வந்தால் மட்டும் செல்போன் பயன்படுத்துங்கள். தினமும் சமூகவலை தளங்களுக்கு என அரை மணி நேரம் முதல் ஒரு மணி நேரம் மட்டும் ஒதுக்குங்கள். முக்கியமாக இரவு 10 மணிக்கு மேல் செல்போனை தொடுவ தில்லை என்று சபதமே எடுத்துக்கொள்ளலாம்.

இப்படி முடிவெடுத்து கடைப்பிடிக்கும் முதல் சில நாட்கள் கொஞ்சம் கடினமாகத் தெரியலாம். ஏதோ முக்கியமான செய்திகளை தவற விட்டதாக எண்ணம் வரும். அப்போதும் உறுதியோடு இருங்கள். அடுத்தடுத்த நாட்களில் செல்போன் இல்லாமல் வாழ பழகிப்போய்விடும். நாம் இதையும் இழக்கவில்லை என்ற உண்மையும் புரியும். அதோடு, எத்தனை நேரத்தை செல்போன் விழுங்கி யிருக்கிறது என்பதை அனுபவிக்கும் வகையில் அலுவலகத்திலும் வீட்டிலும் அதிக நேரம் கிடைப்பதை உணரமுடியும். செய்ய வேண்டிய வேலைகளை சிறப்பாகவும் தெளிவாகவும் செய்ய முடியும். உறவினர், நண்பர்களிடம் எரிச்சலடையாமல் பேச முடியும். செல்போன் இல்லாமலும் கிடைக்கும் மகிழ்ச்சி.

# ஒரு சிகரெட் என்ன செய்யும்..?

டீஜ் ஏஜ் மாணவ, மாணவியர்கள் முதன்முதலாக அனுபவிக்கத் துடிக்கும் சாகசம் என்றால், அது சிகரெட் புகைப்பது. ஏனென்றால், அதில் ஒரு பெரிய மனுஷத் தன்மை ஒளிந்திருப்பதாக நினைக்கிறார்கள். மிகப்பெரும் நடிகர்கள், நடிகையர்கள் ஸ்டைலாக சிகரெட்டுடன் போஸ் கொடுப்பதைப் பார்த்து, அதில் ஏதோ மிகப்பெரும் ஆற்றல் ஒளிந்திருப்பதாக நினைக்கிறார்கள். போதாக்குறைக்கு பெற்றோர், ஆசிரியர்கள் அனைவரும் புகைக்கு எதிரியாக இருப்பதால், அவர்களை புகைத்தே தீர வேண்டும் என்று இறங்குகிறார்கள்.

என்றோ ஒரு நாள் ஆசைக்கு புகைப்பது ஒரு வகையில் நல்ல அனுபவம். ஆனால், அதில் விழுந்துகிடப்பது பேரவலம். இந்த பழக்கம் அடுத்து பான்பராக், மது, ஊசி என்று எங்கெங்கோ கொண்டுபோகக் கூடியது. ஆகவே, ஆரம்பத்திலேயே முற்றுப்புள்ளி வைக்க வெண்டியது சிகரெட் பழக்கம். ஒரு சிகரெட் எத்தனை தூரம் மனிதனை நசுக்கக்கூடியது என்பதை பாலகுமாரன் வார்த்தைகளில் கேட்டுப் பாருங்கள்.

இந்த சிகரெட்தான் என்னை குனிய வைத்து சுருள வைத்து இடையறாது இரும வைத்து மூச்சு திணற வைத்து மரணத் தறுவாயில் இருக்கும் பிராணியை போல மாற்றும் என்று அப்போது தெரியவில்லை. சிகரெட்டில் நிகோடின் என்ற நஞ்சு இருக்கிறது. அந்த நஞ்சு நரம்புகளில் பாய்ந்து நரம்பு மண்டலத்தை சேதப்படுத்தும்





# மந்திரச்சொல்

இதுவும் கடந்து போகும் என்பது, நம்மால் எதுவும் செய்ய முடியாத கையறு நிலை.

என்று பத்திரிகை வாயிலhக தெரிந்தபோது, எனக்கெல்லாம் அது நடக்காது என்று முட்டாள்தனமாக நினைத்துக் கொண்டேன். நாலைந்து சிகரெட்டில் நரம்பு மண்டலம் என்ன ஆகிவிடும் என்ற அலட்சியமும் இருந்தது. நாலைந்து சிகரெட் மெல்ல மெல்ல பெருகி ஒரு பாக்கெட் என்றாகி பத்து இருபது என்றாகி ஒரு நாளைக்கு நூற்றியிருபது சிகரெட்டுகளாக மாறிவிட்டால் வேறென்ன நடக்கும்?

நிகோடின் என்பது வெறும் புகையல்ல. அதுவொரு போதையான ரசாயனம். அது என்ன செய்யும்?

கன்னக் கதுப்புகளில், உதடுகளில், ஈறுகளில் அந்த ரசாயனம் தாக்கும்போது ஒரு விறுவிறுப்பு ஏற்படுகிறது. ஒரு குணமாற்றம் ஏற்படுகிறது. சிகரெட் புகையை இழுத்து நுரையீரலில் தேக்கும்போது அங்கிருந்து உடம்பிலுள்ள எல்லா ரத்த அணுக்களுக்கும் பரவி எல்லா இடங்களிலும் ஒரு அமைதி படர்கிறது. கண் கிறக்கமான ஒரு நிலைமை ஏற்படுகிறது.

இது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. உதவியும் செய்தது. என்ன உதவி?

சுற்றுப்புறம் எவ்வளவு மோசமாக இருந்தாலும் எத்தனை இரைச்சல் இருந்தாலும் உள்ளடங்கி ஆழ்மனதில் அமிழ்ந்து சிந்திக்க சிகரெட் உதவி செய்வதாக நினைத்துக் கொண்டேன். அப்படி சிந்திப்பதால்தான் கதை எழுதுகிறேன் என்று நினைத்துக் கொண்டேன்.

காலை, மாலை, இரவு என்று எல்லா நேரங்களிலும் சிகரெட் வேண்டியிருந்தது. சிகரெட் பிடிப்பதற்காகவே பலமணி நேரம் கூட்டங்களில் உட்காருவதை தவிர்த்தேன். அரை மணிக்குமேல் யாரோடும் அமர்ந்து அமைதியாக பேச முடியவில்லை.

வெகு விரைவாக சாப்பிட்டு விடுவேன். குழம்பு சாதம் நாலு கவளம், தயிர் சாதம் நாலு கவளம் மடமடவென்று சாப்பிட்டுவிட்டு வயிறு நிறைந்ததும் வெளியே யோய் ஒரு சிகரெட் பற்ற வைத்து புகை இழுத்தால்தான் சாப்பிடதன் நிறைவு பூர்த்தியாகும். இது மிகமிக கேவலமான நிலைமை. ஆரோக்ய குறைவான சிந்தனை. உடம்பிலுள்ள நரம்பு



“குருநாதரை மனமுருக வேண்டி இந்த சிகரெட்தான் கடைசி, என்று சொல்லி ஒரு பாக்கெட் சிகரெட் முழுவதும் வீட்டு வாசலில் நின்றே அமைதியாக பிடித்து முடித்த பிறகு அந்த பெட்டியை கசக்கி குப்பைத் தொட்டியில் எறிந்தேன்.”




மண்டலத்தை அறுத்தெறிகின்ற மிகப்பெரிய காரியம். பத்தொன்பது வயதில் தொடங்கிய சிகரெட் பழக்கம் மெல்ல மெல்ல வளர்ந்து நாற்பத்தைந்தாவது வயதில் உச்சகட்டத்தை அடைந்தது. இழுத்து இழுத்து புகையை உள்வாங்கியதால் புகை நுரையீரலுக்கு மட்டுமல்லாது

இரைப்பைக்கும் போயிற்று. இரைப்பையில் புகை தங்கி மேல் வயிறு பெரிதானது. மேல் வயிறு பெரிதாக இருந்ததால் நடக்கும்போது மூச்சு வாங்கியது. மாடிப்படி ஏறும்போது சிரமமாக இருந்தது. எது பற்றியும் கவலைப் படாமல் இடையறாமல் சிகரெட் பிடித்தபடி இருந்தேன். என் வீட்டிலுள்ளவர்கள் ‘இவனை மாற்ற முடியாது” என்று கைகழுவி என் போக்கிலேயே விட்டார்கள். ‘நிச்சயம் ஒருநாள் நீங்களாக விட்டுவிடுவீர்கள்” என்றும் சொன்னார்கள்.

அது நேர்ந்தது.

திருமணத்திற்காக ஒரு மகள் இருக்கிறாள். வளர்ந்து படிக்க வேண்டிய ஒரு மகன் இருக்கிறான். இருந்தும் கவலையின்றி இத்தனை செலவு செய்கிறோமே, உடம்பு பாழாகிறதே என்று கவலைப்பட்டு என் குருநாதரை மனமுருக வேண்டி இந்த சிகரெட்தான் கடைசி, என்று சொல்லி ஒரு பாக்கெட் சிகரெட் முழுவதும் வீட்டு வாசலில் நின்றே அமைதியாக பிடித்து முடித்த பிறகு அந்த பெட்டியை கசக்கி குப்பைத் தொட்டியில் எறிந்தேன்.

மறுநாளிலிருந்து சிகரெட் பிடிக்கவில்லை. முதல் ஒரு மணி நேரம் தவிப்பாக இருந்தது. பல் கடித்து பொறுத்துக் கொண்டேன். இன்னும் அரை மணி ‘இன்னும் அரைமணி” என்று தள்ளிப் போட்டேன். அரை நாள் சிகரெட் பிடிக்காமல் இருந்தது ஆரோக்யமாக தெரிந்தது. அன்று முழுவதும் பிடிக்காமல் இருந்தால் என்ன என்று நினைத்தேன்.

இருந்தேன். நெஞ்சு விசாலமானது. அதற்கு பிறகு இரண்டு நாட்கள், மூன்று நாட்கள் சிகரெட் பிடிக்கவில்லை. நான்காவது நாள் சிகரெட் தேவைப்பட வில்லை. நடுவே ஒரு சிகரெட் பிடித்திருந்தாலும் கால் இடறி மறுபடியும் புகைக்குழியில் விழுந்திருப்பேன். முற்றிலும் மாறுபட்ட மனிதனாக, நன்கு சுவாசிக் கிறவனாக, மற்றவர்கள் சிகரெட் பிடித்தால் மூக்கை பொத்திக் கொள்பவனாக மாறினேன்.

ஆனால் என்ன, செய்த பாவங்கள் விடுமா?

சிகரெட்டை விட்ட இரண்டு வருடங்களுக்கு பிறகு இதயத்தை பலமாக தாக்கியது. அடைப்புகள் ஏற்பட்டன. இரண்டாயிரத்தில் பைபாஸ் ஆபரேஷன் செய்து கொண்டேன். அப்போதும் சிகரெட் பிடிப்பவனாக இருந்தால் மரணம் அன்றே குறிக்கப் பட்டிருக்கும். சிகரெட்டை நிறுத்தி ஆரோக்யத்தை அதிகப்படுத்தியதால் அந்த ஆபரேஷனை சமாளிக்க முடிந்தது.

பிறகு பத்து வருடங்கள் எந்தவித இம்சையும் இல்லாமல் அழகாக வாழ்க்கை ஓடியது. இரண்டா யிரத்து பதினொன்றில் நீரிழிவு காரணமாக ரத்தக் கொதிப்பின் காரணமாக மறுபடியும் அடைப்பு ஏற்பட, இரண்டாம் முறை பைபாஸ் செய்து கொண்டேன்.

சுவாச பயிற்சி செய்திருந் ததால், மூச்சு பற்றிய ஞானம் இருந்ததால், தினந்தோறும் காலையும் மா'லயும் வேகமாக நடந்ததால், மெல்லிய உடற்பயிற்சிகள் செய்ததால் இரண்டாவது பைபாஸையும் தாண்டிவர முடிந்தது.

ஆனால், இரண்டாயிரத்து பன்னிரெண்டில் அடுத்த சோதனை. பத்தொன்பது வயதில் பிடித்த சிகரெட்டுகள் அறுபத்தாறு வயதில் தன் விஷத்தன்மையை காட்டியது. தன் வக்கிரத்தை நிரூபித்தது. நுரையீரலின் அடிப்பக்கம் முழுவதும் நிகோடினால் ஏற்பட்ட சளி அடைப்புகள். நுரையீரல் முழுத் திறனோடு வேலை செய்யவில்லை. அதற்கான திறனை மெல்ல மெல்ல இழந்தது. அதோடு சளி அடைப்பும் சேர்ந்து பழிவாங்கியது. மூச்சுத் திணறல் ஏற்பட்டது.




ஒருபிடி சாதத்திற்கு அவஸ்தை படும் நிலைமை. முகம் முழுவதும் மூடி ஆக்சிஜனை வேகமாக செலுத்தினால் தான் உயிரோடு இருப்பேன் என்கிற நிலைமை. என்.ஐ.வி என்கிற அந்த விஷயத்தோடுதான் இரவு தூங்க முடியும் என்ற நிலைமை. பிராங் கோஸ்கோபி என்று மூச்சுக்குழலுக்குள் கருவியை விட்டு சோதனை செய்து அங்கே அடி நுரையீரலில் அடர்த்தியாக அசைக்க முடியாதபடிக்கு கெட்டியாக சளி இருப்பதை தெரிந்து கொண்டார்கள்.

இதை எப்படி சரி செய்வது?

வலியை பொறுத்துக் கொள்ளலாம். வேறு ஏதேனும் பத்தியமாக இருந்தால் அவ்விதமே நடந்து கொள்ளலாம். மூச்சு இழுத்து பிராணவாயு உள்ளே போய் வெளியே வருவதே கடினமானால் எப்படி சமாளிப்பது? தினசரி மரண போராட்டமாக மாறிவிட்டது.

மூச்சு வேகமாக இழுத்து இழுத்து இன்னும் சில நிமிடங்களில் பாலகுமாரன் செத்து விடுவான் என்ற எண்ணத்தை மற்றவருக்கு ஏற்படுத்தியது. வீடு தவித்தது. வீட்டிற்குள் மூன்று நான்கு ஆக்சிஜன் சிலிண்டர்கள் வைக்கும்படி நேரிட்டது. வேகமாக காற்றை செலுத்தக்கூடிய கருவி தனியாக இருந்தது. ஆஸ்பத்திரியிலிருந்து வீடு வந்தவுடன் வீடு ஆஸ்பத்திரியாக மாறியது. எப்பொழுதும் மூக்கில் ஆக்சிஜன் இருக்கும்படி ஒரு அவஸ்தை. ஸ்கூட்டர் எடுத்துக்கொண்டு மயிலாப்பூர் முழுவதும் சுற்றித் திரிந்தவனுக்கு சிறைத் தண்டனை போல வீட்டில் அதே அறையில் இருக்கும்படி நேரிட்டது. மிகப்பெரிய வலியில்லை. ஜூரம் இல்லை. ஆனால், ஆக்சிஜன் குழாயை எடுத்து விட்டால் மூச்சுத்திணற ஆரம்பிக்கும். அது இல்லாமல் நடக்க முடியாது, பேச முடியாது, உண்ண முடியாது, எதுவும் செய்ய முடியாது. காலில் சங்கிலி கட்டி கையில் இரும்பு குண்டை கொடுத்தது போன்ற மிகப்பெரிய தண்டனை. வேறு எந்த வழியும் இல்லாமல் அமைதியாக உட்கார்ந்து கொண்டேன்.

ஒருநாளைக்கு நூற்றியிருபது சிகரெட் பிடிக்க வேண்டும் என்கிற நிலையில் இருந்ததை நினைத்து சிரித்துக் கொண்டேன். அப்படிப் புகைத்தால்தான் கதை எழுத வரும் என்று முட்டாள்தனமாக நம்பியதை நொந்து கொண்டேன். மரணம் எல்லோருக்கும் வரும். எப்பொழுது வேண்டுமானாலும் வரும்.

எந்த ரூபத்தில் வேண்டுமானாலும் வரும். ஆனால், மூச்சு திணறி 'இதோ' 'இதோ' என்று பயம் காட்டுகின்ற ஒரு நிலைமை யாருக்கும் வரக்கூடாது. நெஞ்சு வலித்தது. ஐந்து நிமிடம் துடித்தார். உயிர் நீங்கியது என்பது பரவாயில்லை. மூச்சு விட முடியாமல் உள்ளுக்குள் போன மூச்சை வெளியே செலுத்த முடியாமல், வெளியே இருக்கின்ற பிராண வாயுவை உள்ளே இழுக்க முடியாமல் திணறி கதறுகின்ற வேதனை யாருக்கும் வரக்கூடாது.

சிகரெட் பிடிக்கலாம் என்கிற ஆசையுள்ளவர்கள் தயவு செய்து அந்த எண்ணத்தை அழித்து விடுங்கள். சிகரெட் பிடிப்பவர்கள் உடனடியாக அந்த பழக்கத்தை கைவிடுங்கள். சிகரெட் உங்களை இன்றல்ல... பிற்பாடு ஒருநாள் மிக நிதானமாக கொல்லுகின்ற ஒரு விஷயம் என்பதை புரிந்து கொள்ளுங்கள். இந்த இருமல், இந்த முதுகு குனியல், இந்த தளர்வு, இந்த வேதனையெல்லாம் சிகரெட் பிடிப்பதால் விரைவாக ஒரு மனிதனுக்கு வரும்.

நல்லபடியாக சுவாசம் செய்து கொண்டிருந்தால் எழுபத்தைந்து வயது வரை ஆரோக்யமாக நிச்சயம் இருக்க லாம். அறுபத்தாறு வயதில் தள்ளாடுகின்ற நிலைமை, எழுத முடியாத நிலைமை, பேச முடியாத நிலைமை, ஒரு மனிதனுக்கு வருகிறதென்றால் அது வேதனைக்குரியது. அது தவிர எந்நேரமும் நம்மைச் சுற்றி தங்கும்படியாக நம் உறவினர்களுக்கு நாம் சுமையாக இருக்கிறோம் என்பது இன்னும் இம்சையான விடயம்.

வீட்டிலுள்ள முக்கியமான ஒரு நபர் நோய்வாய்ப் பட்டால் அந்த வீடே நோய்வாய்ப்படும். எனவே எது விஷமோ, எது மிக கொடூரமாக நம்மை தாக்குமோ அதிலிருந்து நாம் விலகி நிற்க வேண்டும். புகை பிடித்தல் உடல்நலத்திற்கு தீங்கானது மட்டுமல்ல, உங்கள் குடும்பத்திற்குத் தீங்கானது. உங்கள் வாழ்க்கையை சிதறடிக்கப் போவது.

உங்கள் வளர்ச்சியை அறுத்தெறியப் போவது. உங்கள் ஞானத்தை பொசுக்கப் போவது. எனவே, சிகரெட்டை மனதாலும் நினையாமல் நன்கு மூச்சு இழுத்து வெளியே விடுகின்ற பிராணாயாமம் கற்றுக் கொள்ளுங்கள். சிகரெட் ஆசையே வராது.













மகிழ்ச்சிக்கு

ரூ.500/-

ஞானகுரு மகிழ்ச்சி மின்னிதழுக்கு ஒவ்வொரு மாதமும் விமர்சனங் கள், பாராட்டுகள் அதிகரித்து வருவது, மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. மக்களிடம் மகிழ்ச்சி, அன்பு, நிம்மதி, ஆறுதல் போன்றவற்றை பரப்பு வதையே ஞானகுரு மகிழ்ச்சி இதழ் நோக்க மாகக் கொண் டுள்ளது. வணிக நோக்கமற்று வெளியிடப்படும் இந்த மின்னிதழ் மற்றும் ஞானகுரு இணைய தளம் (gyanaguru.com) இயங்குவதற்கு உங்களால் உதவ இயலும்.

இந்த மின்னிதழை உங்களுக்குத் தெரிந்த அனைவருக்கும், மற்ற குழுவினருக்கும் பகிர்ந்து, அவர்களையும் மற்றவர்களுக்கு பகிரச் செய்யுங்கள். இதுதவிர, மின்னிதழுக்கு ஆண்டு சந்தா 500 ரூபாய் என்று முடிவு செய்யப் பட்டுள்ளது. அதேநேரம், இதனை சந்தா கொடுப்பவர்கள் மட்டுமே படிக்க இயலும் வகையில் கட்டமைக்க வில்லை என்பதால், எப்போதும் போல் எல்லோரும் ஞானகுரு மகிழ்ச்சி இதழை படிக்கவும், பரப்பவும் முடியும். எனவே, விருப்பம் உள்ளவர்கள் கீழ்க்கண்ட அலைபேசி எண்ணுக்கு அல்லது வங்கிக் கணக்கிற்கு ஆண்டு சந்தா 500 ரூபாய் அனுப்பிவையுங்கள். பணம் அனுப்பியவர்கள், தங்கள் பெயர், முகவரியை கீழ்க்கண்ட செல்போன் எண்ணுக்கு வாட்ஸ் ஆப் மூலம் அனுப்ப வேண்டுகிறோம். இது, மகிழ்ச்சிக்கு அதிக மகிழ்ச்சி தரும்.

சந்தா செலுத்துபவர்கள் ஞானகுரு ஆறுதல் மையத்தில் உறுப்பினராக முடியும். குறிப்பிட்ட எண்ணிக்கையில் உறுப்பினர்கள் இணைந்ததும், ஆறுதல் மையம் குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு வெளிவரும்.

நன்றி.

GPAY : +91 72997 53999



www.gyanaguru.com

# சட்டத்தை மீற ஆசைப்படலாமா..?

தனக்கு சிக்கல் வராது என்றால் சட்டத்தை மீறுவதில் மனிதர்களுக்கு அலாதி ஆனந்தம்தான்.. ஒருவழிப் பாதையில் நுழைவது, நிர்ணயிக்கப்பட்ட வேகத்தை மீறுவது, வெள்ளைக்கோடு தாண்டி பயணிப்பது, ஹெல்மட் இல்லாமல், வண்டிக்கு இன்சூரன்ஸ் இல்லாமல் ஏன் லைசென்ஸ்கூட இல்லாமல் வண்டியோட்டுவதை ஒரு சாகசமாகவே கருதுகிறார்கள். இப்படி சின்னச்சின்னதாக சட்டத்தை மதிக்காமல் நடப்பதுதான், பின்னர் ஒரு நாள் பெரிய சிக்கலில் மாட்டிவைக்கும். அதனால் எப்போதும், எதற்காகவும் சட்டத்தை மீறாமல் வாழ்வது நிம்மதி தரும்.

ஒவ்வொரு குடிமகனுக்குமான அடிப்படை கடமைகளை இந்திய அரசியலமைப்பு சட்டம் வரையறுத்துள்ளது. அதாவது எல்லா குடிமக்களும் அரசியல் சட்டத்தை மதித்து நடக்க வேண்டும். நாடு, தேசியக்கொடி, தேசிய கீதத்தை பாதுகாக்க வேண்டும். சுதந்திரத்திற்காக போராடிய தலைவர்களை பின்பற்றி நடக்கவேண்டும். சாதி, மத, மொழி, இனம் போன்ற எல்லைகளைக் கடந்து சகோதர மனப்பான்மையுடன் வாழவேண்டும். குழந்தைகளுக்கு கல்வி வாய்ப்பு தருவதுடன், பெற்றோரை பாதுகாக்க வேண்டும். இவை போன்று ஒவ்வொரு மனிதனும் கடைப்பிடிக்கும் வகையில் ஏராளமான சட்டங்கள் நடைமுறையில் இருக்கின்றன. இந்த சட்டங்களை எல்லாம் பிறருக்காகத்தான் என்ற எண்ணம்தான் பெரும்பாலோருக்கு உண்டு. அதனால் வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் சட்டத்தை மதிக்காமல் தப்புகிறார்கள்.

சட்டத்தை சாதாரணமாக நினைத்து சிக்கலில் மாட்டிக் கொண்டவர்தான் ராஜேஸ்வரி. கிராமப்புறத்தில் இருந்து நகரத்திற்கு படிக்கவந்த ராஜேஸ்வரியை அழகி என்றுதான் சொல்லவேண்டும். நடுத்தரக்குடும்பம் என்பதால் கல்லூரி ஹாஸ்டலில் தங்கவைத்து படிக்க வைப்பதற்கு மிகவும் சிரமப்பட்டார்கள். ராஜேஸ்வரியுடன் ஹாஸ்டலில் தங்கியிருந்த பெண்களில் பெரும்பாலோர் மிகவும் வசதியானவர்கள். வாசனை திரவியம் வாங்குவதற்குக்கூட ஆயிரக்கணக்கில் பணம் செலவழித்தார்கள். தினம் ஓர் ஆடை அணியும் பெண்களும் இருந்தார்கள். அதனால் அந்தக் கூட்டத்தில் சேராமல் தனிமையில் இருந்தாள் ராஜேஸ்வரி.

இந்த நேரத்தில்தான் ராஜேஸ்வரியிடம் தோழமையாக பேசினாள் ரோஸி. மிகவும் வசதியான குடும்பத்தை சேர்ந்தவள் என்று சொல்லிக்கொண்டாள். ராஜேஸ்வரியை அழகாக்குவதற்காக மேக்கப் பொருட்களும் தன்னுடைய உடைகளையும் கொடுத்தாள். அவற்றை அணிந்துகொண்டதும் மேலும் அழகாகத் தெரிந்தாள் ராஜேஸ்வரி. ஆனால், சில மாணவிகள் ராஜேஸ்வரியை தனிமையில் சந்தித்து, 'ரோஸியுடன் சேரவேண்டாம், அவள் தவறான பெண்' என்று சொன்னார்கள். ஆனால் அதனை ராஜேஸ்வரி நம்பவில்லை. தங்கள் நட்பை குலைக்கும் முயற்சி



என்று நினைத்தாள். அதனால் ரோஸியின் நட்பைவிட்டு விலகவில்லை.

ஒரு நாள் தற்செயலாக ரோஸியின் குடும்பத்தினர் ஹாஸ்டலுக்கு வந்தார்கள். அவர்களும் தன்னைப் போன்ற நடுத்தரக்குடும்பம் என்பதை உணர்ந்து அதிர்ச்சியடைந்தாள் ராஜேஸ்வரி. பிறகு எப்படி நிறைய பணம், உடை, அலங்காரப் பொருட்கள் கிடைக்கிறது என்று ரோஸியிடம் கேட்டாள்.

அதெல்லாம் உனக்கு வேண்டாம், வெளியே யாருக்கும் தெரியாத சின்னச்சின்ன வேலைகள் செய்கிறேன். அதனால் தேவையான பணம் கிடைக்கிறது. எனக்கு ஸ்காலர்ஷிப் கிடைத்திருக்கிறது என்று வீட்டில் பொய் சொல்லிவிட்டு, என் கல்லூரிக் கட்டணத்தையும் ஹாஸ்டல் கட்டணத்தையும்நானேகட்டிக்கொள்கிறேன் என்றாள். அது என்ன வேலை என்று கேட்பதற்கு பயந்து அமைதியாக இருந்தாள் ராஜேஸ்வரி. அடுத்த சில மாதங்களில் ராஜேஸ்வரி வீட்டிலும் பணப்பிரச்னை வந்தது. ஹாஸ்டல் தொகை கட்டுவதற்கு தாமதமானது. அதனால் தானே முன்வந்து ரோஸிடம் உதவி கேட்டாள் ராஜேஸ்வரி.


வசதியான ஒருவருடன் ஒரே ஒரு நாள் தங்கினால் போதும் ஏராளமான பணம் தருவார், அவர் எனக்கு மட்டும் தெரிந்தவர் என்பதால் விஷயம் ரகசியமாக இருக்கும். வெளியே யாருக்கும் தெரியாது என்று ஆசை காட்டினாள் ரோஸி. பாதுகாப்பான உறவுக்கும் ரோஸி உறுதியளித்ததால், நீண்ட யோசனைக்குப் பிறகு சம்மதித்தாள் ராஜேஸ்வரி. ஒரு விடுமுறை தினத்தில் ஊருக்குச் சென்றுவருவதாக சொல்லிவிட்டு, அந்த பணக்காரருடன் தங்கினாள் ராஜேஸ்வரி. ஹாஸ்டல் கட்டணம் மட்டுமின்றி நிறைய புடவைகளும் கிடைத்தது. தன்னுடைய தந்தை ஒரு மாதம் கஷ்டப்பட்டு உழைத்து கிடைக்கும் பணத்தை ஒரே நாளில் சம்பாதித்த சந்தோஷத்தில் மிதந்தாள் ராஜேஸ்வரி.

அந்த நபருக்கு உன்னை மிகவும் பிடித்துவிட்டது, மீண்டும் அழைக்கிறார் என்று சொன்னாள் ரோஸி. உச்சி குளிர்ந்துவிட்டாள் ராஜேஸ்வரி. மீண்டும் அவரை சந்தித்து பணம் பெற்றுவந்தாள். அந்தப் பணத்தில் நல்ல செல்போன் வாங்கிக்கொண்டாள். அடிக்கடி அவர் கூப்பிடுவதும், ராஜேஸ்வரி செல்வதும் வாடிக்கையானது. அதன்பின் ஒரு நாள் அந்த நபர் வேறு ஓர் ஆணை அறிமுகப்படுத்தினார். நான் அந்த மாதிரி பெண் இல்லை என்று முரண்டு பிடித்தாள் ராஜேஸ்வரி.









> அதெல்லாம் உனக்கு வேண்டாம், வெளியே யாருக்கும் தெரியாத சின்னச்சின்ன வேலைகள் செய்கிறேன். அதனால் தேவையான பணம் கிடைக்கிறது. எனக்கு ஸ்காலர்ஷிப் கிடைத்திருக்கிறது என்று வீட்டில் பொய் சொல்லிவிட்டு, என் கல்லூரிக் கட்டணத்தையும் ஹாஸ்டல் கட்டணத்தையும் நானே கட்டிக்கொள்கிறேன் என்றாள்.

உடனே அவர் தன்னுடைய செல்போனில் இருந்து ஒரு படத்தை எடுத்துக்காட்டினார். அது ராஜேஸ்வரியின் நிர்வாண படம். புகைப்படத்தைப் பார்த்ததும் வசமாக சிக்கிக்கொண்டதை உணர்ந்தாள். அதன்பிறகு அந்த நபர் கைகாட்டும் நபர்களுடன் எல்லாம் செல்ல வேண்டிய சூழலுக்கு ஆளானள். அப்படி ஒருவருடன் நகரத்துக்கு ஒதுக்குப்புறமாக இருந்த ஹோட்டலுக்கு சென்றபோது போலீஸிடம் சிக்கிக்கொண்டாள் ராஜேஸ்வரி. கல்லூரி மாணவி என்று அழுது கெஞ்சியதால் வழக்குப்பதிவு செய்யாமல், ராஜேஸ்வரியின் பெற்றோரை வரவழைத்தார்கள். தங்கள் மகளை விலைமகளாகப் பார்த்த அவள் குடும்பத்தார் அதிர்ச்சியில் உறைந்துபோனார்கள். யாருக்கும் தெரியாமல் ஊரைவிட்டு காணாமல்போன அந்தக் குடும்பம், இப்போது எங்கே, எப்படி இருக்கிறது என்று யாருக்கும் தெரியாது.

தான் செய்வது தவறு என்பது ராஜேஸ்வரிக்கு நிச்சயம் தெரிந்தே இருந்தது. ஆனால், அந்த தவறு யாருக்கும் எப்போதும் தெரியவராது என்று நினைத்தாள். நமது நாட்டு சட்டப்படி, பணத்துக்காக ஆணும் பெண்ணும் உறவு கொள்வது குற்றம். தன்னுடைய ஆதாயத்துக்காக சட்டத்தை மீற நினைத்து, தானே மாட்டிக்கொண்டாள் ராஜேஸ்வரி.

இவளைப் போன்றுதான் ஏராளமான நபர்கள் தங்கள் ஆதாயத்துக்காக சட்டத்தை மீறுகிறார்கள். குழந்தைகளை வேலைக்கு வைப்பது தவறு என்று தெரிந்தே, வசதியான அதிகாரிகளும் தொழிலதிபர்களும் வீட்டு வேலைக்கு சிறுவர், சிறுமிகளை வேலைக்கு அமர்த்துகிறார்கள். சட்டத்தின் முன் அனைவரும் சமம், ஒரு நிரபராதிகூட தண்டிக்கப்படக் கூடாது என்றெல்லாம் சட்டத்தைப்பற்றி உயர்வாக பேசிக்கொண்டே சட்டத்தை மீறுகிறார்கள்.

? இன்று சட்டத்தை அதிகம் வளைப்பது யார்?

சட்டத்தை பாதுகாக்க வேண்டிய காவல்துறையினர்தான் சட்டத்தை தங்கள் இஷ்டத்துக்கு வளைத்துக்கொள்கிறார்கள். குழந்தை தொழிலாளர், கொத்தடிமை, கந்துவட்டி, வாகனத்திருட்டு போன்றவை எங்கு நடக்கிறது, யார் செய்வது என காவல்துறையினருக்கு நிச்சயம் தெரியும். ஆனால் தங்கள் ஆதாயத்துக்காக இந்த செயல்களை காவல்துறை முற்றிலும் ஒழிப்பதில்லை. கிட்டத்தட்ட அனைத்து சட்டமீறலுக்கும் ஆரம்பம் காவல்துறை என்று உறுதியாகவே சொல்லலாம்.

? மக்கள் ஏன் சட்டத்தை மீறுவதற்கு ஆசைப்படுகிறார்கள்?

தப்பில்லாமல் தப்புசெய்தால் தப்பில்லை என்றுதான் மக்கள் நினைக்கிறார்கள். தனக்கு முன்னே ஒருவன் தவறு செய்து தண்டனை இல்லாமல் தப்புவதை பார்த்ததும், தானும் அப்படி செய்வதற்கு முன்வருகிறார்கள். ஒரு முறை தண்டனையின்றி தப்பியதும், மீண்டும் மீண்டும் தவறு செய்கிறான். தாங்கள் தவறு செய்வது மட்டுமின்றி தங்கள் குழந்தைகளுக்கும் கற்றுத்தருகிறார்கள். ஒருவழிப்பாதையில் வேகமாக தந்தை செல்வதை பார்க்கும் மகனும்,, நாளை அப்படித்தான் செல்வான். இவை எல்லாவற்றையும் மீறி, சட்டத்தை மீறுவதால் கிடைக்கும் சிறு இன்பமும் தவறு செய்யத் தூண்டுகிறது.

? சட்டத்தை மதிக்கத்தான் வேண்டுமா?

சட்டம் என்ற ஒன்று இருப்பதால்தான் உன்னுடைய வீட்டில் நிம்மதியாக தூங்க முடிகிறது. சட்டம் இல்லையென்றால் வலியவன் உன் வீட்டுக்குள் நுழைந்து சொத்துகள் மட்டுமின்றி மனைவியையும் அபகரித்துச் செல்வான். எல்லோருக்கும் சமமான உரிமை கிடைப்பதற்கு வழிவகை செய்யும் சட்டத்தை எல்லோரும் மதிக்கும்போதுதான் அனைவருக்கும் நியாயம் கிடைக்கும்.

# ஞானகுரு பதில்கள்



**? குடும்ப வாழ்க்கை ரொம்பவே இம்சையாக இருக்கிறது, சாமியாராகப் போய்விடலாமா..?**

**- எஸ்.ரவிச்சந்திரன், பெரம்பலூர்.**

**ஞானகுரு :**

புத்தனுக்கு சொகுசான குடும்ப வாழ்க்கை சலித்துப் போனது. அதனால் உண்மையின் சுயரூபத்தைக் காண ஆசைப்பட்டு... இஷ்டப்பட்டு கஷ்டப்பட்டான். சந்தோஷமான குடும்ப வாழ்க்கையே புத்தனுக்கு சிறையாக தெரிந்தது. ஆனால், நீங்கள் குடும்ப சுமையைத் தூக்கமுடியாமல் காவி கட்ட நினைக்கிறீர்கள். குடும்ப வாழ்க்கையை ஜெயிக்க முடியாத ஒருவனால் நிச்சயம் துறவியாகவும் வாழமுடியாது. வேண்டுமானால், துறவி வேடத்தில் பிச்சைக்காரனாக இருக்கலாம்.

**? விபத்துகளுக்குக் காரணம் மனிதனின் அறியாமையா?**

**- எம்.சந்திரமோகன், திருப்பத்தூர்.**

**ஞானகுரு :**

அலட்சியமே விபத்துகளுக்குக் காரணம். சாலை விதிகள் ஏற்படுத்தப்பட்டது பிறருக்காக மட்டுமே என்ற எண்ணம் சகல மனிதருக்கும் உண்டு. தேவை ஏற்படும்போது ஹெல்மட் தவிர்ப்பது, ஒருவழிப் பாதையில் செல்வது தவறாகத் தெரிவதில்லை. தன்னால் கண் விழித்து நீண்ட நேரம் ஓட்டுவதற்கு முடியும் என்று அசட்டுத்தனமாக நம்புபவரும், எத்தகைய சூழலிலும் என்னால் வேகத்தை கட்டுப்படுத்த முடியும் என்று நினைப்பவரும், வாகனத்தின் தன்மை அறியாமல் ஓட்டுபவர்களுமே விபத்துகளுக்குக் காரணம்.



**? இந்த நிமிடத்தை ரசித்து வாழத்தான் ஆசைப்படுகிறேன். ஆனால், சந்தோஷம் கிடைக்கவில்லையே..?**

**- யு.மீனா, விருதுநகர்.**

**ஞானகுரு :**

ஒரே நதியில் இரண்டு முறை கால் நனைக்க முடியாது என்பார்கள். அதாவது, இரண்டாவது முறை கால் நனைக்கும்போது, முதல் முறை உன்னை நனைத்த நீர் காணாமல் போயிருக்கும். இதுதான் இந்த நிமிடத்தில் வாழ விரும்புபவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டிய உண்மை. தாஜ்மஹால் மீது ஏகப்பட்ட அபிப்ராயங்கள், கனவுகள் வைத்துக்கொண்டு, அதனை தரிசிக்கச் சென்றால்... அந்த பிரமாண்டமும் ஏமாற்றம் தரலாம். எனவே, எந்த முன்முடிவுகளும் இல்லாமல் ரசிக்க வேண்டும்.

உறவினர் வீட்டுக்குச் செல்லும்போது, கடந்தகால அனுபவங்களை முழுமையாக மறந்துவிடுங்கள். அந்த உறவினர் பரிசு கொடுத்திருக்கலாம் அல்லது திட்டியிருக்கலாம், அந்த அனுபவங்களை மறந்துவிட்டு, புத்தம் புதிதாக உறவினர் வீட்டுக்குள் நுழைந்து, அவர்கள் கவனிப்பை எந்த ஒப்பீடும் இல்லாமல் ஏற்றுக்கொள்ள வேண்டும். தினமும் புதிதாய் பிறப்பதாக எண்ணிக்கொண்டால், வீடு, குழந்தை, உறவு, நட்பு, ஊழியர்கள் அனைவரும் புதிதாகத் தெரிவார்கள்... நிகழ்காலமும் மகிழ்ச்சி தரும்.









**? குழந்தைகளை வளர்ப்பது மிகவும் சிரமமாக இருக்கிறதே..?**

**- எஸ்.ராஜாத்தி, பட்டுக்கோட்டை**

**ஞானகுரு :**

குழந்தைகளைப் பற்றி உலகப்புகழ் கவிஞர் கலீல் ஜிப்ரான் கூயிருப்பதைக் கேளுங்கள். உங்கள் குழந்தைகள் உங்கள் மூலமாக வந்திருக்கிறார்களே தவிர, உங்களிடமிருந்து அல்ல. உங்கள் குழந்தைக்ள் உங்களுடன் இருந்தாலும் உங்களுக்குச் சொந்த மானவர்கள் அல்ல. உங்கள் அன்பை நீங்கள் அவர்களுக்குத் தரலாம். உங்கள் எண்ணங்களை அல்ல. இதனை புரிந்துகொண்டால் குழந்தை புதிராக இருக்காது.


**? வறுமை என்பது உடல் சார்ந்ததா அல்லது மனம் சார்ந்ததா?**

**- எம்.பொன்னுத்தாய், களக்காடு.**

**ஞானகுரு :**

வறுமை என்பது சூழல் சார்ந்தது. வறுமையை வெல்லவேண்டும் என்று ஆசைப்படுபவர் நிச்சயம் அதனை வென்று காட்டுவார். தலையெழுத்து என்று நம்புபவர் தடுமாறிக்கொண்டே இருப்பார். அதோடு வறுமையும் வளமையும் நிரந்தரமல்ல. அவை காலத்துடன் தொடர்புடையது. லட்சாதிபதியாக, கோடீஸ்வரராக இருப்பவரை கஜா போன்ற ஒரு புயல் அல்லது ஒரு விபத்து புரட்டிப்போட்டு பிச்சைக்காரனாக மாற்றிவிடும். ஒரே ஒரு வெற்றி அத்தனை வறுமையையும் விரட்டிவிடும். மழை, வெயில், பனி என்று காலங்கள் மாறுவதுபோல், வறுமையும், வளமையும் மாறிமாறி வரலாம். எல்லாவற்றையும் அனுபவமாகப் பார்ப்பவருக்கு வாழ்க்கை வசமாகிவிடும்.







**? புகழ் வாய்ந்த பெரிய பள்ளியில் படிப்பதுதானே வெற்றிக்கு எளிய வழி..?**

**- பி.சௌந்திரபாண்டியன், திருநெல்வேலி.**

**ஞானகுரு :**

நல்ல மாணவன் இருக்கிறானே தவிர, நல்ல பள்ளி என்று ஒன்று இல்லவே இல்லை. அரசு பள்ளியில் படித்து முடித்து எத்தனையோ சாதனை புரிந்த மாமனிதர்கள் இருக்கிறார்கள். அப்துல் கலாம் சாதாரண அரசு பள்ளியில் படித்துத்தான், இந்தியாவின் முதல் குடிமகனாக மாறினார். தென் தமிழ்நாட்டில் பூச்சிக்காடு எனும் குக்கிராமத்தில் ஒரு ஏழ்மையான வீட்டில் பிறந்து, தன்னுடைய படிப்பு மூலம் மட்டுமே டெல்லி வரையிலும் வென்று கொடி கட்டிப் பறந்தவர் பி.பி.ராஜன். கிராமத்துக் கருப்பு, சராசரிக்கும் குறைவான உயரம் போன்ற குறைகள் இருந்தாலும் மருத்துவ அகத்தியன் என்று சக மருத்துவர்களால் பாராட்டப்பெற்று, மருத்துவப் பல்கலைக்கழக துணைவேந்தராக பதவி வகித்தவர். மாணவர்களுக்கு இலவச பற்பொடி வழங்குவதற்கும் பான்பராக், குட்கா போன்றவை தடை செய்யப்படு வதற்கும் முக்கியக் காரணகர்த்தா. சேலம், தர்மபுரி பகுதி மக்கள் ஃபுளோரைடு ஆபத்துடன் வாழ்கிறார்கள் என்பதை ஆய்வின் மூலம் அறிந்து, சுகாதாரமான தண்ணீருக்கு பரிந்துரை செய்தவர். இவரை போன்று குன்றிலிட்ட விளக்காக எத்தனையோ நபர்கள் அரசு பள்ளியில் படித்தும் வெற்றியைத் தொட்டிருக்கிறார்கள். எனவே, பள்ளி என்பது கட்டிடமே தவிர, வெற்றி கொடுக்கும் அபூர்வ விளக்கு அல்ல.

**? மனுநீதிச் சோழன் போன்று இப்போது நீதி வழங்கப்படுவதில்லையே..?**

**- பி.ரத்தினம்மாள், கடலூர்.**

**ஞானகுரு :**

மனுநீதிச் சோழன் ஒரு முட்டாள் அரசன். தெரியாமல் செய்வது தவறு, தெரிந்தே செய்வது தப்பு. இந்த புரிதல்கூட அந்த அரசனுக்கு இல்லை. சோழனின் மகன் அறியாமல் செய்த தவறுக்காக, அதே பாணியில் மரண தண்டனை என்பது அருவருப்பான கொடூரத்தின் உச்சம். தன்னை மக்கள் புகழ்ந்து பேசவேண்டும் என்ற அற்ப ஆசைக்காக சிறுவனைக் கொலை செய்த சைக்கோ அவன். மனுநீதிச் சோழன் போன்ற நீதிமான்கள் ஒருபோதும் நம் நாட்டுக்கு வேண்டாம்.




**? நாட்டை சீரமைக்கும் கடமை யாருக்கு இருக்கிறது... ஆசிரியரிடமா, அரசியல்வாதியிடமா அல்லது மக்களிடமா?**

**- பி.முனிப்பாண்டி, தூத்துக்குடி.**

**ஞானகுரு :**

நாட்டை சீரமைப்பதற்கு தகுதி எதுவும் தேவையில்லை. ஒருவர் நல்ல குடும்பத் தலைவனாக இருந்தால், அதுவே போதுமானது. ஆசிரியர்கள் பணியில் சேர்ந்ததும் தேடுவதை நிறுத்திக்கொள்கிறார் கள். அரசியல்வாதிகள் பதவிக்கு வந்ததும் கனவை விற்றுவிடுகிறார்கள். மக்கள் பணத்துக்காக தங்கள் ஓட்டை விற்றுவிடுகிறார்கள். ஆகவே ஒட்டுமொத்தமாக சேர்ந்து யாரும் சீரமைக்கத் தேவையில்லை. ஒவ்வொரு நபரும் நல்லவிதமாக அவருடைய வீட்டை சீரமைத்தால் போதும், நாடு தானே சீரடைந்துவிடும்.



**? இவ்வுலகில் நிம்மதியாக வாழும் மனிதர்கள் இருக்கிறார்களா, என்ன?**

**- டி.வாசுகி, வேளாங்கண்ணி.**

**ஞானகுரு :**

ஏன் இத்தனை அவநம்பிக்கை. கட்டில், மெத்தை, கொசுவர்த்திச் சுருள் போன்ற எந்த வசதிகளும் இல்லாமல் ரோட்டோரங்களில், ஓடும் வாகனங்களில், பணி நேரங்களில் தூங்கும் மனிதர்களை தேடிப் போய் தரிசனம் செய். தூங்கும் அத்தனை மனிதர்களும் நிம்மதியானவர்களே.





**? குடும்ப வாழ்க்கையில் பெண் ஆதிக்கம் செலுத்துகிறாள்... ஆண் அடங்கிப் போகிறான்... ஏன்..?**

**- எஸ்.மகேந்திரன், பெரியகுளம்**

**ஞானகுரு :**

பெண்ணின் முதல் ஆதிக்கம் குழந்தைகள். இரண்டாவது ஆதிக்கம் கணவன். எந்த ஒரு நன்மைக்காகவும் இந்த இரண்டையும் அவள் விட்டுக்கொடுக்க மாட்டாள். ஆனால், ஆணின் முதல் ஆதிக்கம் சம்பாத்தியம். இரண்டாவது பிறரிடம் அங்கீகாரம். அதற்குப் பிறகுதான் குழந்தைகள், மனைவி, அம்மா எல்லாமே. ஆணுக்கு குடும்பத்தில் மல்லுக்கட்டுவதற்கு ஆசை இருப்பதில்லை. அதனாலே கண்டுகொள்ளாமல் அடங்கிப் போகிறான்.










**மகிழ்ச்சிக்கு மொழி ஒரு தடையில்லை. புதிய முயற்சியாக ஆங்கிலத்திலும் மலர்கிறது ஞானகுரு மகிழ்ச்சி. எளிய மொழியில் எல்லோருக்கும் கிடைக்கட்டும் மகிழ்ச்சி.**

**happiness only real when shared**

**Touch the above book to read the magazine**

## அடுத்த பிரதமர்

# மோடியா ராகுலா?



ஆழ்மனமே தாழ் திறவாய்!

அத்தியாயம்-20

யோகாசனத்தின் நன்மைகளை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், அதனை கடுமையாக விமர்சனம் செய்வதாக பலரும் வருத்தப்படுகிறார்கள். ஒரு சாதாரண உடற்பயிற்சியாக யோகாசனத்தை ஏற்கலாம். வெட்டிபொழுது நிறையவே இருப்பவர்கள் நீண்ட நேரம் யோகாசனம் செய்வதில் எந்த பிரச்னையும் இல்லை. ஆனால், அதில் தெய்வீகத் தன்மை ஒளிந்திருப் பதாகவும், நோய்களை விரட்ட முடியும் என்று எண்ணுவதே மூட நம்பிக்கை.

யோகாசனம் போலவே இப்போது பல்வேறு சிகிச்சை முறைகள் பாப்புலராகி வருகின்றா. அதில் குறிப்பிடத்தக்கது ஹீலிங் தெரபி. ஒருவரை தொடாமலே நோயை குணப்படுத்துவதாகச் சொல்கிறார் கள். கேன்சர், நீரிழிவு உள்ளிட்ட அத்தனை நோய்களையும் ஹீலிங் தெரபியால் விரட்டிவிட முடியும் என்கிறார்கள். இதன் அடிப்படையில் ரெய்கி, டச் தெரபி, கலர் தெரபி, மியூசிக் தெரபி என புதுசுபுதுசாக அறிமுகம் செய்கிறார்கள்.

சிகிச்சைக்கு வரும் நோயாளியிடம் மருத்துவர் கூறும் ஆறுதலான வார்த்தை களும், அது தரும் நம்பிக்கைகளும் பாதி நோயை விரட்டிவிடும் என்பது உண்மையே. அதாவது மனதளவில் நோயை எதிர்த்துப் போராடுவதற்கு நோயாளி தயாராகிவிடுவார். பின்னர் அவரது உடலும் ஒத்துழைப்பு கொடுக்கும்.

இதன் அடிப்படையிலே உடலை தொட்டுச் செய்யும் டச் தெரபியும் உடலை தொடாமல் செய்யும் ஹீலிங் தெரபியும் இயங்குகின்றன.

www.gyanguru.com
www.gyanguru.com

டச் தெரபியில் உடலில் எங்கு வலி இருக்கிறதோ அந்த இடத்தில் இதமாக ஆறுதலாக தடவிக் கொடுப்பார்கள். இதமாக வருடும் உணர்வுகளை மூளைக்கு நரம்புகள் கொண்டுசென்று வலியை நீக்குகிறது. அதேநேரம், இது குறைவான நேரம் மட்டுமே பயனளிக்கிறது. கடுமையான நோயில் பாதிக்கப்பட்டவரும் தூங்கும் நேரத்தில் வலியை மறப்பது போன்று, இதமாகத் தடவும் நேரத்தில் வலி மட்டுப்படுகிறது அல்லது மட்டுப்படுவதாக எண்ணுகிறார்கள்.

அதேபோல் ஹீலிங் தெரபி என்பது ஹவாய் பழங்குடியினரின் மருத்துவ முறை. ஆழ் மன வெறுப்பு, கோபம், துக்கத்தை வெளியேற்றி உடலைச் சுத்தப்படுத்தும் சிகிச்சை முறை ஆகும். ஒருவருக்கு நோய் வருவதை உடல் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இல்லாமல் ஆழ்மன பிரச்னையாக கருதுகிறார்கள். கலந்து பேசுதல், பிரார்த்தனை, சுய சுத்திகரிப்பு, மன்னிப்பு கோருதல் மூலம் இதை சரி செய்ய முடியும் என்று பழங்குடியினர் நம்புகிறார்கள்.

மேலும், ஒருவருக்கு உடல் நலமில்லை என்றால் அவருக்கு மட்டும் சிகிச்சை அளிப்பது சரியாக இருக்காது என்று குடும்பத்தில் உள்ள அனைவரையும் சிகிச்சைக்குள் கொண்டுவருகிறார்கள். வருத்தம் தெரிவித்தல், மன்னிப்பு கோருதல், நன்றி சொல்லுதல், அன்பு செலுத்துதல் போன்வைகளை ஹீலிங் சிகிச்சையில் நடைமுறைப்படுத்துகிறார்கள். தொடாமலே குணப்படுத்த முடியும் என்று ஆழ்மனதை நம்ப வைக்கிறார்கள். பக்கத்தில் இருந்து பேசுவதுகூட இப்போது தேவையில்லை, வேறு ஒரு நாட்டில் இருந்து வீடியோ மூலம் பேசினாலே குணம் கிடைக்கும் என்ற வகையில் நம்பிக்கை பெருகிவருகிறது.

ஒரு நல்ல திரைப்படம் பார்க்கும் ஒருசில ரசிகர்கள் கண்ணீர் விட்டு அழுவதை, வாய்விட்டு சிரிப்பதை பார்க்க முடியும். அதாவது அவர்கள் படத்தோடு படமாக ஒன்றி விடுவார்கள். அப்படிப்பட்ட நேரத்தில் அவர்கள் உடலில் இருக்கும் வேதனை, மனதில் இருக்கும் கவலை வெளியே தெரிவதில்லை. இந்த டெக்னிக் மூலமே ஹீலிங் சிகிச்சை நடைபெறுகிறது.

"ஒரு நல்ல திரைப்படம் பார்க்கும் ஒருசில ரசிகர்கள் கண்ணீர் விட்டு அழுவதை, வாய்விட்டு சிரிப்பதை பார்க்க முடியும். அதாவது அவர்கள் படத்தோடு படமாக ஒன்றி விடுவார்கள். அப்படிப்பட்ட நேரத்தில் அவர்கள் உடலில் இருக்கும் வேதனை, மனதில் இருக்கும் கவலை வெளியே தெரிவதில்லை."

அமைதியான சூழலில், ஆழமான நம்பிக்கை விதைக்கப்படுவதால் கொஞ்ச நேரம் மனமும் உடலும் பெரும் மாற்றத்துக்கு ஆளாவதை பார்க்கிறார்கள். உடனே, ஹீலிங் மூலம் அத்தனை நோயையும் குணப்படுத்திவிட முடியும் என்ற நம்பிக்கையில் தொடர் பயிற்சி வகுப்புகளில் ஈடுபடுகிறார்கள். பயிற்சி எடுக்கத் தொடங்கும் ஆரம்ப காலகட்டத்தில் கண்டிப்பாக நோய் போய்விடும் என்று நம்புவார்கள். ஒரு கட்டத்தில் நோய் குணமாகவில்லை என்றதும், ஹீலிங் வகுப்பை நாம் சரியாக கடைபிடிக்கவில்லை என்று தன்னைத்தானே குற்றம் சாட்டிக்கொள்கிறார்கள். மேலும், இத்தனை பேர் நம்பிக்கையுடன் ஹீலிங் வகுப்பில் பங்கேற்கும்போது, நாம் மட்டும் அவநம்பிக்கை கொள்வது சரியில்லை என்ற எண்ணத்தில், வகுப்புகளை மட்டும் தொடர்வார்கள்.

ஆழ்மனமே
தாழ்
திறவாய்!

ஹீலிங் மூலம் நோய் குணமாகாது என்று தெரியவந்தாலும், இவர்களால் ஹீலிங்கை கைவிட முடியாத அளவு பழக்கத்துக்கு மாறியிருப்பார்கள். திடீரென ஒரு விழிப்பு நிகழும்போது அதிலிருந்து சட்டென வெளியே வந்து, இத்தனை நாட்களும் பயிற்சி செய்ததை முழுமையாக மறந்துவிடுவார்கள். இவர்கள் யாரையும் அல்லது சிகிச்சை முறையை குற்றம் சாட்டுவது இல்லை. ஏனென்றால், இந்த சிகிச்சை முறையின் மூலம் எந்த பக்கவிளைவுகளையும் இவர்கள் சந்திப்பது இல்லை

பக்கவிளைவுகள் எதுவுமில்லை என்ற ஒற்றை விதியின் மீதிருக்கும் நம்பிக்கையின் அடிப்படையில் புதுப்புது நோயாளிகளையும், வீட்டில் வேலை இல்லாத இல்லத்தரசிகளையும், ஓய்வு பெற்றவர்களையும் ஹிலீங் தெரபிக்கு அடிமை ஆக்குகிறார்கள். இதில் இணைபவர்களும் லாபமும் இல்லை, நஷ்டமும் இல்லை என்பதால் நல்ல பொழுதுபோக்கு அம்சமாக பயன்படுத்திக்கொள்கிறார்கள்.

அதேநேரம், ஹீலிங் மூலம் நோய் தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கையில் நீரிழிவு, ரத்த அழுத்த நோயாளிகள் கொஞ்சகாலம் மருந்து, மாத்திரைகளை கைவிடுவது நிச்சயம் கடுமையான பின்விளைவுகளை ஏற்படுத்துகிறது. உடல் நலத்தில் மருந்தைவிட மனமே முக்கியம் என்றாலும், மருந்துக்குப் பழகிய உடல் திடீரென மாற்றத்தை ஏற்பதில்லை. ஆகவே, இலவசமாக கிடைக்கும் ஆரோக்கியம் என்பது பொய். ஹீலிங் நிரந்தரத் தீர்வு இல்லை என்ற விழிப்புணர்வு ஆழ்மனதுக்குத் தேவையே தவிர, தொடாமலே குணமாக வாய்ப்பு இருக்கிறது என்ற பொய்யான நம்பிக்கை அல்ல.

ஆழ்மனம் மூலம் எல்லாமே சாதிக்க முடியும் என்றால், ராகுல் காந்தியால் அடுத்த பிரதமராக வர முடியுமா... அவருக்குத்தான் நாட்டில் உள்ள அத்தனை எதிர்க்கட்சிகளும் ஆதரவு தருகிறார்களே என்று நண்பர் ஒருவர் கேள்வி கேட்டிருக்கிறார். தான் இந்திய நாட்டின் பிரதமராக வரவேண்டும் என்று ராகுல் நினைக்கிறார் என்றால், அது அவரால் மட்டுமே ஆகக்கூடிய காரியம் அல்ல. நாட்டில் உள்ள பெரும்பான்மை மக்களின் மனநிலையில் அவர் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும். அவருக்கு ஆதரவாக மற்ற கட்சிகளும் ராகுல்காந்தியே பிரதமர் வேட்பாளர் என்ற பிம்பத்தை மக்கள் மனதில் விதைக்க வேண்டும். ஆனால், அப்படியொரு சூழல் இன்னமும் உருவாகவில்லை.

தற்போது பா.ஜக.வில் அடுத்த பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி என்பதில் உறுதியாக இருக்கிறார்கள். ஆனால், ராகுல் கூட்டணியில் இன்னமும் பிரதமர் யார் என்பதை உறுதியாகவும் வெளிப்படையாகவும் அறிவிக்கும் நிலைமை வரவில்லை. இன்னும் சொல்லப்போனால் ராகுல் காந்திதான் பிரதமர் வேட்பாளர் என்று சொன்னால், இந்த கூட்டணி உடைந்தே போகலாம். ஆகவே, முதலில் தேர்தலில் வெற்றி பெறுவோம், அதன்பிறகு பிரதமர் வேட்பாளரை முடிவு செய்வோம் என்று கூட்டணிக் கட்சிகள் கூறுகின்றன. ஆனால் இது, சாதாரண வாக்காளர்களுக்குப் புரியப்போவதில்லை. மோடியுடன் யார் மோதப்போவது என்றுதான் மக்கள் ஆர்வமாக காத்திருக்கிறார்கள். இந்த கேள்விக்கு சரியான விடையை ராகுலும் அவரது டீமும் சொல்ல வேண்டியது அவசியம்.

மேலும், இப்போது மோடிக்கு எதிராக ஒன்று சேர்ந்திருக்கும் அத்தனை கட்சிகளும் சேர்ந்து சொல்லும் ஒரே கோஷம் என்ன தெரியுமா..? பா.ஜ.க.வை தோற்கடிக்க வேண்டும் என்பதையே சொல்கிறார்கள். இந்த நெகடிவ் சிந்தனையே அவர்களுக்கு தோல்வியைக் கொடுத்துவிடலாம். அவர்களுக்கு தேவை பாசிடிவ் சிந்தனை. அதாவது, நமது கூட்டணி வெற்றி பெறும், நம்முடைய பிரதமர் வேட்பாளர் ராகுல் அல்லது அவர்கள் தேர்வு செய்யும் ஒரு நபர் என்று மக்களிடம் உறுதிபட தெரிவிக்க வேண்டும். அப்படி ஒரு அரசியல் மாற்றம் உருவானால் மட்டுமே மோடியை தோற்கடிக்க முடியும். இல்லையென்றால், எதிர்க்கட்சியினர் குழப்பத்தினாலே மோடி மீண்டும் ஜெயித்துவிடுவார். இதுதான், மக்களின் ஆழ்மன கருத்தாக இருக்கும்.

ராகு காலத்தில் ஏதேனும் ஒரு வேலையை செய்யத் தொடங்கி அதில் வெற்றி காண முடியுமா..?

**- அடுத்த இதழில்**





**மந்திரச்சொல்**


ஒருவரை மறக்க
இன்னொருவரை
தேடாதீர்கள்
யாராலும்
யாரையும் மறக்க
செய்திடலாகாது....!!














RAJAN Dental



Regain your confident smile with Full mouth Dental Implants at **Rajan Dental**

# எல்லோருக்கும் நிரந்தரப் பற்கள் சாத்தியமா..?

பல்வேறு காரணங்களால் அனைத்து பற்களையும் இழந்தவர்களுக்கு நிரந்தர பற்கள் பொருத்தி சாதனை படைத்திருக்கிறார்கள், 60 ஆண்டுகள் பாரம்பர்யம் கொண்ட சென்னை மயிலாப்பூர் ராஜன் பல் மருத்துவமனை மருத்துவர்கள். இதுகுறித்து சீனியர் மருத்துவ நிபுணர்களிடம் பேசினோம்.

### ஸைகோமா ஆல்-ஆன்-4 சிகிச்சை

இந்த படங்களில் உள்ளவர்கள் அனைத்து பற்களையும் இழந்து எங்களிடம் நிரந்தர பற்கள் பொருத்தி கொண்டவர்கள். எங்களுக்குத் தெரிந்தவரை படத்தில் உள்ள 5 வயது குழந்தை தான், ஆசியாவிலேயே முதல் டென்டல் இம்பிளான்ட் பொருத்திய குழந்தை. அதே போல நாங்கள் 85 வயது நிரம்பிய முதியவருக்கும் நிரந்தர பற்கள் பொருத்தி உள்ளோம்.

முதுமையால், ஈறு நோய்களால், விபத்தால், கருப்பு பூஞ்சையால் (COVID), பிறவி குறைபாடுகளால் பற்களையும் தாடை எலும்பையும் இழந்தவர்களுக்கு இன்று உலகம் முழுவதும் நவீன ஸைகோமா ஆல் ஆன் 4 சிகிச்சைதான் (Zygoma All-on-4) சிகிச்சையே மேற்கொள்ளப்படுகிறது. இதனை கடந்த 30 ஆண்டு காலமாக ராஜன் பல் மருத்துவமனையில் ஓரல் டிஜிட்டல் ஸ்கேன், 3D பிரின்டட் ஸ்டென்ட்ஸ், கோன் பீம் சிடி ஸ்கேன் துணையுடன் கம்ப்யூட்டர் முறையில் ஆய்வு மேற்கொண்டு, நான்கே நாட்களில் நிரந்தர செயற்கை பற்கள் பொருத்துகிறோம்.

நாங்கள் பொருத்தும் செயற்கை பற்கள் அக்ரலிக், செராமிக்கால் தயாரிக்கப்படுவதால், 10 ஆண்டுகள் முதல் 30 ஆண்டுகள் வரை நீடித்து உழைக்கும். இதனால் மாறாத முகவடிவம், திருப்தியான உணவுப் பழக்கம், தெளிவான பேச்சு மற்றும் தன்னம்பிக்கையும் கிடைக்கும். இயற்கை பற்கள் போன்று உணவை நன்றாக மென்று சாப்பிடலாம் என்பதால் ஜீரணிக்கும் தன்மை அதிகரித்து நோய் பாதிப்பும் குறையும். மேலும், இந்த சிகிச்சையால் ஈறு தொற்று நோய் மற்றும் சர்க்கரை நோயும் கட்டுப்படுவது போனஸ் நன்மை" என்றனர்.

### பற்கள் சீரமைப்பு

தொடர்ந்து பேசிய மருத்துவர்கள், "ஒருவரது புன்னகையை அழகாக்குவது சீரான பல்வரிசை தான். ஆனால், எல்லோருக்கும் அப்படி இயற்கையில் அமைந்து விடுவதில்லை. தெற்றுப்பல், எத்துப்பல், கோணல் வரிசை, ஒன்றன் மீது ஒன்று வளர்ந்திருப்பது, மேல் மற்றும் கீழ் பற்கள் சீரற்று அமைந்திருப்பது போன்றவை உண்பதற்கு இடையூறாக இருப்பதுடன் தன்னம்பிக்கையையும் குலைத்துவிடும். ஆனால், இப்போது இந்த அனைத்து குறைகளும், அலைன்மென்ட் டெக்னாலஜி மூலம் எளிதாகவும், முழுமையாகவும் எங்களால் சீர் செய்யப்படுகின்றன.

பற்கள் சீரமைப்பு மட்டுமின்றி தாடை சீரமைப்பு, நாடி சீரமைப்பு, தாடை சீரமைப்பு, இருக்கும் பற்களை டேமேஜ் செய்யாமல் அழகு படுத்துதல், ஈறுகளின் அளவை குறைத்து புன்னகையை சரி செய்தல், கம்பிகள் மூலம் பற்களின் ஒழுங்கின்மையை சரி செய்தல் போன்ற அனைத்து சிறப்பு சிகிச்சைகளும் நாங்கள் மேற்கொள்கிறோம்.

### காணொளி ஆலோசனை

வெளி ஊர்களில் உள்ளவர்கள் மொபைல் போன் வாட்ஸ்-ஆப் வீடியோ கால் மூலம் எங்கள் மருத்துவர்களை தொடர்பு கொண்டு முதல் கட்ட ஆலோசனை பெற நாங்கள் வசதி செய்கிறோம். மேலும் தொடர்புக்கு...

**ராஜன் பல் மருத்துவமனை,**
எண்.56, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை,
மைலாப்பூர், சென்னை-600004. தொலைபேசி-044 40105050, அலைபேசி: +91 9789001100,
www.rajandental.com.